Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

33ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 33 | பாலம்: 16 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 15, 2023

# மாகாண அரசின் பசுமைப் பிரதேச அணுகுமுறை

ஒன்ராறியோ மாகாண அரசு பசுமைப் பிரதேசத்தின் (Greenbelt) ஒரு பகுதியை வீடுகள் அமைக்கும் திட்டத்திற்கு ஒதுக்கும்போது மிகவும் குறைபாடுள்ள ஒரு செயல்முறையைப் பின்பற்றியுள்ளது என ஒன்ராறியோ மாகாணக் கணக்காளர் நாயகம் Bonnie Lysyk தனது 95 பக்க அறிக்கையை 2023 ஓகஸ்ற் 9ஆம் திகதி வெளியிடும்போது ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

“பசுமைப்பிரதேச மாற்றம்” என்ற இந்த விசேட அறிக்கையை ஒன்ராறியோ சட்ட சபையின் மூன்று எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் 2023 ஜனவரியில் கணக்காளர் நாயகத்திற்குக் கொடுத்த முறையீட்டைத் தொடர்ந்து அவர் தயாரித்து வெளியிட்டார். இந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ள விபரங்கள், “2022 யூன் மாதம் ஒன்ராறியோ மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் பழமைவாதக்கட்சி பெரும் பான்மை இடங்களைப் பெற்று ஆட்சி அமைத்தது. அப்போது உள்ளூராட்சி விவகாரங்கள் மற்றும் வீட்டுவசதி அமைச்சராகப் பொறுப்பேற்ற Steve Clarkஇற்கு வழங்கிய ஆணைக் கடிதத்தில் முதல்வர் Doug Ford பசுமைப் பிரதேசத்தை சுருக்கியும், விரிவாக்கியும் மாற்றங்கள் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

அதைத் தொடர்ந்து வீட்டுவசதி அமைச்சரகம் தனது பணியாட்களுக்கு சில குறிப்பிட்ட பிரதேசங்களை மாற்றம் செய்வதன்மூலம் முழுமையான பசுமைப் பிரதேசத்தை மதிப்பாய்வு செய்யுமாறு பணித்திருந்தது. 2022 ஒக்ரோபரில் வீட்டு வசதி அமைச்சரக அதிகாரிகள் “பசுமைப் பிரதேச செயற்திட்டக்குழு” என்று ஒரு சிறிய குழுவை அமைச்சர் தலைமையில் இப்பணிக்கு நியமித்திருந்தனர். இப்பணி மூன்று வாரங்களில் நடைபெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. வீட்டுவசதி அமைச்சரின் தலைமைப் பணியாளர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பசுமைப் பிரதேசத்தின் 22 இடங்களில் 15 இடங்களை பசுமைப்பிரதேசத்தில் இருந்து நீக்குவதற்குத் தெரிவு செய்திருந்தார்.”



2022 நொவம்பர் 4ஆம் திகதி வீட்டுவசதி அமைச்சர் Steve Clark ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில், “ஒன்ராறியோ மாகாண அரசு 810,000 ஹெக்ரேஸ் (hectares) பரப்பளவு பசுமைப் பிரதேசத்தில் (Greenbelt) 2,995 ஹெக்ரேஸ் பரப்பளவு காணிகளை 15 இடங்களில் தெரிவுசெய்து அதில் 50,000 புதிய வீடுகள் அமைக்கத் திட்ட மிட்டுள்ளது. இது பழமைவாதக்கட்சி அரசு 10 வருடங்களில் 1.5 மில்லியன் வீடுகள் கட்டப்படும் என அளித்த தேர்தல் வாக்குறுதியின் ஒரு பகுதியாகும். பசுமைப் பிரதேசத்தில் இருந்து நீக்கப்படும் 2,995 ஹெக்ரேஸ்க்குப் பதிலாக வேறு இடங்களில் இருந்து 3,805 ஹெக்ரேஸ் பரப்பளவு காணிகள் பசுமைப்பிரதேசத்தில் சேர்க்கப்படும். இதன்மூலம் 2005இல் பிரகடனப்படுத்தப்பட்ட பசுமைப்பிரதேசம் மேலதிகமாக 810 ஹெக்ரேஸ் ஆல் அதிகரிக்கப்படும்” எனக் குறிப்பிட்டிருந்தது.

அப்போது அமைச்சர் ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியில், இந்தத் தெரிவு 30 நாட்கள் பல்வேறுபட்ட குழுக்களுடன் கலந்து ஆலோசனை செய்யப்பட்ட பின்னரே சுற்றுப்புறச்சூழல் பாதிப்பு குறைவாக உள்ள 15 இடங்கள் தெரிவு செய்யப்பட்டன. இந்தப் 15 இடங்களின் நில உரிமையாளர்கள் 2025ஆம் ஆண்டிற்கு முன்னரே 50,000 புதிய வீடுகள் அமைக்கும் பணியை ஆரம்பிப்பர் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

மாகாண அரசு 3,805 ஹெக்ரேசால் அதிகரிக்கப்பட்ட பசுமைப்பிரதேசத்தில் "Paris Galt Moraine"இனுடைய ஒரு பகுதி மற்றும் “Greater Golden Horseshoe” பிரதேசத்தில் உள்ள 13 நகர்புற நதிப் பள்ளத்தாக்குகள் அடங்கும். 2005ஆம் ஆண்டில் அப்போது ஒன்ராறியோ மாகாணத்தில் ஆட்சியில் இருந்த லிபரல் அரசு விவசாய நிலங்கள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் விடயங்களில் பாதுகாக்கப்பட வேண்டிய நிலங்களில் கட்டிடங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதில் இருந்து தடுப்பதற்காகவே இப்பசுமைப்பிரதேசமாக்கும் சட்டமூலத்தை அமலாக்கியது.

2022 நொவம்பரில் வீட்டுவசதி அமைச்சர் விடுத்த அறிக்கையைத் தொடர்ந்து பசுமைக்கட்சியின் தலைவர் Mike Schreiner, “ஒன்ராறியோ முதல்வர் Doug Fordஇனுடைய சுற்றுச்சூழல் அழிப்புப் பாரம்பரியம் ஒவ்வொரு நாளும் மோசமாகி வருகிறது. மக்களுக்கு அத்தியாவசியத் தேவையான வீடுகளைக் கட்டுவதற்கும், சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கும் இடையில் ஒன்றைத் தெரிவு செய்யவேண்டும் என்ற இந்த அரசின் தவறான கொள்கையை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்” என்றார்.

அமைச்சரின் அறிக்கை வெளியாகி சிறிது நாட்களில் CBC ஊடகம் பழமைவாதக் கட்சியுடன் தொடர்புடைய மிகவும் பிரபல்யம் வாய்ந்த வீடுகள் அமைத்து விற்பனை செய்யும் நிறுவனங்களிற்கு உரிமையானவர்

தொடர்ச்சி 05 பக்கம்

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan CIU,CHS
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436
Real Estate • Insurance

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

BUYING / SELLING HOMES
BALA MANI MBA
Sales Representative
Contact: 647-290-1022 | 0605bala@gmail.com | visit: www.realtorbala.ca
* Lawyer Fee, Moving Cost, Staging all Free of Cost.
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* We help to find your best future home!

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com

# GRAND Opening




Hampton Inn by HILTON

## Hampton Inn by Hilton, Midland

**877 King St, Midland, ON L4R 0B7**

## JOIN US ON:

**Date: Thursday, August 17, 2023**

**Time: 5:30 pm**


Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
MORTGAGE ALLIANCE
anton@myhomemls.ca
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4
FAX: 1 866 566 3068

# 13ஆம் திருத்தத்தை மாற்றங்களின்றி நடைமுறைப்படுத்த முடியுமா?




இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை அப்படியே அமல் படுத்தி தமிழ் மக்களின் பிரச்சினை களுக்கு தீர்வு காணுமாறு ரணில் விக்ரமசிங்க தலைமையிலான தற் போதைய அரசாங்கத்திடம் இந்தியா வலியுறுத்தி வருகின்றது. அண்மை யில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியா சென்றிருந்தபோது இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அழுத்தமான முறையில் இதனை இலங்கை ஜனாதிபதியிடம் கூறியிருக்கின்றார்.

இதனையடுத்து 13ஆவது திருத்தச் சட்டத்தை முன்னிறுத்தி தமிழ் கட்சி களுடன் அரசாங்கம் பேச்சுக்களை நடத்தி வருகின்றது. சிங்கள கட்சி களின் ஆதரவைப் பெறும் வகையில் அவர் அக்கட்சிகளுடனும் உரையாடி வருகின்றார் எனத் தெரிவிக்கப்படு கின்றது. எனினும், 13ஆம் திருத்திச் சட்டத்தை உள்ளவாறே, முழுமையாக நடைமுறைப்படுத்தும் எண்ணம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் உள்ளதா என்றால், இல்லை என்று தான் கூற வேண்டும். அவர் 13ஆம் திருத்தச்சட்டதில் சொல்லப்பட்ட அதிகாரங்கள் சிலவற்றை நீக்கி விட்டு அதனை அமல்படுத்தவே விரும்புகின்றார்.

உண்மையில், 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதானால், தமிழ் கட்சி களுடனோ, சிங்களக் கட்சிகளுடனோ பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டிய அவசியம் இல்லை. சில அதிகாரங்களை நீக்குவதற்கும், சில அதிகாரங்களை குறைப்பதற்குமே அவர் பிரதான தமிழ் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.



குறிப்பாக, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை நீக்குவதற்கு அவர் தமிழ் கட்சிகளில் இணக்கத்தை எதிர்பார்க்கின்றார். இதில் எந்தவித விட்டுக் கொடுப்புகளையும் தமிழ் கட்சிகள் வழங்கக் கூடாது என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

இப்போது சிங்கள கட்சிகளிடையே 13ஆம் திருத்திச்சட்டத்திற்கு எதிரான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி இத்திருத்தச் சட்டத்தை முழுமையாக தமிழர் களுக்கு வழங்கப் போகின்றார் என்பதுபோல் அவர்களின் கருத்துக் கள் சிங்கள மக்கள் மத்தியில் முன்வைக்கப்படுகின்றன.

13ஆம் திருத்தச் சட்டத்தை அமல் படுத்த இடமளிக்க முடியாது என்றும், இதற்கு எதிராக தென்னிலங்கையில் ஒட்டுமொத்த எதிர்ப்பை ஒன்றிணைக்க வுள்ளதாகவும் சிங்கள தேசியவாதி யாக தன்னைக் காட்டிக்கொள்ளும் உதய கம்மன்பில தெரிவிக்கின்றார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ 13 பிளஸ் என்ற நோக்கத்துடன் செயற்பட்டதாலேயே கடந்த 2015ஆம் ஆண்டு மக்களால் புறக்கணிக்கப்பட்டார் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

இது நகைப்பிற்குரிய கருத்தாகும். அவர் தமிழ் மக்களை ஏமாற்றுவதற் காகவே '13 பிளஸ்' என்று அப்போது கூறிக்கொண்டிருந்தார். பின்னர் அவ்வாறு கூறுவதையும் கைவிட்டிருந் தார். இதுபற்றி தமிழர் தரப்பில் கேள்வி எழுப்பிய போது இது வெல்லாம் உடனடியாக நடைமுறைப் படுத்தக் கூடிய காரியமல்ல. நூடில்ஸ் தயாரிப்பது போன்ற விடயமல்லை என்று ஏளனமாக தெரிவித்திருந்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தனிப்பட்ட முறையில் என்னிடம் கூறிய விடயம் ஒன்றை இங்கு குறிப்பிட வேண்டும். சில அரசியல் கட்சிகளுடன் ஒரு தடவை அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவை சந்தித்தபோது, போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஆனந்தசங்கரி முன்வைத்தவேளை அதனை மஹிந்த ராஜபக்ஸ நிராகரித்தாராம்.

உங்கள் தேர்தல் வாக்குறுதிகளின் போது இதனை நீங்கள் கூறியிருக் கின்றீர்கள் என்று குறிப்பிட்டபோது, ஒரு வெடிச்சிரிப்புடன் "தேர்தல் பிரச்சாரங்களின்போது கூறுகின்ற வற்றையெல்லாம் தூக்கிப் பிடித்துக் கொண்டு வருகின்றீர்களே மிஸ்டர் ஆனந்தசங்கரி" என்று கூறினாராம் மஹிந்த. தமிழ் மக்களின் நீண்ட கால பிரச்சினையை எவ்வாறு ஒரு ஜனாதிபதி ஏளனப்படுத்துகின்றார் என்பதை சுட்டிக்காட்டவே இதனை குறிப்பிட வேண்டி வந்தது.

இலங்கையில் மாறிமாறி அரச தலைவர்களாக வருபவர்கள் தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றியே வந்துள்ளனர். ஏமாற்றும் விதங்கள் தான் வித்தியாசம். தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் எவ்வித பிரச்சினை களும் இல்லை என்று கூறிக்கொண்டு தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை களுக்கான தீர்வினை முற்று முழுதாகப் புறக்கணித்தவர்களும் உள்ளனர். தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. அதனைத் தீர்க்க வேண்டும் என்று கூறிக் கொண்டு ஆட்சிக்கு வந்தவர்களும் உள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவரான சந்திரிகா பண்டாரநாயக்க தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன என்று கூறிக்கொண்டு வந்தவர்தான். ஆனால் அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எதனையும் செய்யவில்லை. ரணில் விக்ரமசிங்க வும் இவ்வாறான ஒருவரே. ரணில் விக்ரமசிங்க தமிழ் மக்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கப் போகின்றார் என்றும் 13ஐ அமல் படுத்த ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றி பெறாது என்றும் சிங்கள கடும்போக்கு அரசியல்வாதிகள் கொக்கரித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விற்கு சாதகமான விடயம்தான் "நான் கொடுக்க விரும்புகின்றேன். சிலர் குழப்புகின்றார்கள். சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்பை உருவாக்கு கின்றார்கள். இதனால் நாட்டில் கலவரங்கள் ஏற்படலாம்" என்று கூறிக்கொண்டு சறுக்குவதற்கு ரணிலுக்கு சாதகமான சூழல் ஏற்படலாம்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும். நாடாளுமன்ற உறுப்பினர் கள் இந்தப் பேச்சுவார்த்தைகளில் கவனமாக இருக்க வேண்டும்.

சில தினங்களிற்கு முன்னர் 13ஆம் அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இதன்போது, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப் பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இங்கிலாந்து, இந்தியா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளில் கூட அதிகாரப்பகிர்வு சிறப்பான முறையில் இடம்பெறுவதாக சுட்டிக் காட்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இதே முறைமையை இலங்கையிலும் அமல் படுத்த முடியும் என சுட்டிக் காட்டியுள்ளனர்.

இங்கிலாந்திற்கும் இலங்கைக்கும் இடையிலான அரசியல் சமூக கலாசாரங்கள் முற்றிலும் வேறு பட்டவை என்பதை அமைச்சர் டிரான் அலஸ் சுட்டிக்காட்டி கூட்டமைப்பின ரின் கருத்தை புறக்கணித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான அமைச்சர்களுடனான பேச்சுவார்த்தைகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் நிராகரிக்க வேண்டும். பேச்சுவார்த்தைகளுக்காக நியமிக்கப் படும் உயர்மட்டக் குழுவுடன் மட்டும் உத்தியோகபூர்வமாகப் பேச்சுக்களை முன்னெடுக்கலாம். இப்பேச்சு

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# பசுமை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

களுடைய காணிகளே பசுமைப்பிரதேசத்தில் இருந்து வீடுகள் அமைக்கத் தெரிவு செய்யப்பட்ட 15 இடங்களில் இருப்பதாகச் செய்தி வெளியிட்டிருந்தது. அதைவிட அவர்கள் மிகவும் அண்மைக்காலங்களில் இந்த இடங்களில் உள்ள காணிகளை மற்றவர்களிடமிருந்து மிகவும் குறைந்த விலையில் வாங்கியுள்ளதாகவும் தெரிவித்திருந்தது.



Ontario Premier Doug Ford

இதைத் தொடர்ந்தே ஒன்ராறியோ சட்டசபையின் மூன்று எதிர்க்கட்சித்தலைவர்களும் பழமைவாதக்கட்சியுடன் தொடர்புடைய பிரபல்யம் வாய்ந்த வீடுகள் அமைத்து விற்பனை செய்யும் நிறுவனங்களுக்குப் பழமைவாதக் கட்சி இந்த 15 இடங்களையும் பசுமைப்பிரதேசத்தில் இருந்து எடுத்து, வீடுகள் அமைக்கும் திட்டத்திற்காக ஒதுக்கப் போகிறது என்ற தகவல் முன்கூட்டியே தெரியப்படுத்தப்பட்டதா என ஆய்வு செய்ய வேண்டும் என ஒன்ராறியோவின் கணக்காளர் நாயகத்திடம் 2023 ஜனவரியில் கேட்டிருந்தனர்.




கணக்காளர் நாயகத்தின் அறிக்கையில், இந் நிறுவனங்களுக்கு அரசு பசுமைப்பிரதேசத்தில் இருந்து காணிகளை வீடு கட்டுவதற்கு ஒதுக்க இருப்பது முன்கூட்டியே தெரியப்படுத்தப்படவில்லை. ஆனால், இந்நிறுவனங்களின் உரிமையாளர்களே தமது காணிகளை வீடு கட்டுவதற்குத் தெரிவு செய்யுமாறு வீட்டுவசதி அமைச்சரின் தலைமைப்பணியாளருக்கு பலமுறை மின்அஞ்சல் மற்றும் தொலைபேசி உரையாடல் மூலம் வலியுறுத்தி (lobbied) வந்துள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் வீட்டுவசதி அமைச்சரின் தலைமைப் பணியாளரின் பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும், Bonnie Lysky ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியில் தற்போதும் அமைச்சரின் தலைமைப்பணியாளராக இருக்கும் Ryan Amato தான் இந்த நிறுவனங்களால் தமது காணிகளைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டவர் எனக் குறிப்பிட்டிருந்தார். அவரது அறிக்கையில் Ryan Amatoஆல் தெரிவுசெய்யப்பட்ட 15 இடங்களில் 12 இடங்கள் வீடுகள் அமைத்து விற்பனை செய்யும் பிரபல்யம் வாய்ந்த இந்த நிறுவனங்களின் பரிந்துரையில் குறிக்கப்பட்டுள்ள இடங்களாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

CBC ஊடகத்தின் அறிக்கையில் Silvio De Gasperis உரிமையாளராக இருக்கும் Tacc Groupஉம் Michael Rice உரிமையாளராக இருக்கும் Rice Groupஉம்



Ontario Housing Minister Steve Clark

பசுமைப்பிரதேசத்தில் இருந்து வீடுகள் அமைக்க ஒதுக்கப்பட்ட 15 இடங்களில் பெரும்பாலான இடங்களுக்கு உரிமையாளர்களாக உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்காளர் நாயகம் தனது பேட்டியில், “வீடுகள் கட்டுவதற்கு அரசு தெரிவு செய்த காணிகள் வீட்டுவசதி அமைச்சரின் தலைமைப் பணியாளரை சரியான நேரத்தில் அணுகிய ஒருசில நில உரிமையாளர்களுக்கு ஆதரவாக இருந்தது. இதனால் இந்தச் செயல்முறை மிகவும் குறைபாடுகள் உள்ள ஒரு செயல்முறையாக இருந்தது” என்று கூறியிருந்தார். அத்துடன் அவரின் 95 பக்க அறிக்கையில் ஒன்ராறியோ மாகாண அரசிற்கு இச்செயல்முறைக்கு உதவ 15 பரிந்துரைகளை வழங்கியிருந்தார்.

இவ் அறிக்கையைத் தொடர்ந்து ஒன்ராறியோ மாகாண லிபரல் கட்சியும் புதிய ஜனநாயகக் கட்சியும் வீட்டுவசதி அமைச்சரைப் பதவியில் இருந்து விலகுமாறு கோரி வருகின்றன.

ஒன்ராறியோ மாகாண முதல்வர் Doug Fordஉம் வீட்டுவசதி அமைச்சர் Steve Clarkஉம் ஒன்ராறியோ மாகாணக் கணக்காளரின் விசாரணையின்போது தங்களுக்கு பசுமைப்பிரதேசத்தில் இருந்து வீடுகள் அமைக்க பிரதேசங்களைத் தெரிவு செய்தது Ryan Amatoஇன் கட்டுப்பாட்டுக்குள் நடந்தது எனத் தெரியாது என்று குறிப்பிட்டிருந்தனர். முதல்வர் தனக்கு பசுமைப்பிரதேசத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட 15 இடங்களும் அமைச்சர் இந்தப் பிரேரணையை அமைச்சரவையில் சமர்ப்பித்த நாள் காலையே தெரிவிக்கப்பட்டது என்றார். அமைச்சர் பசுமைப் பிரதேசத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட 15 இடங்களும் தான் பிரேரணையை அமைச்சரவையில் சமர்ப்பிக்க ஒரு கிழமைக்கு முன்னர்தான் தனக்குத் தெரிவிக்கப்பட்டது என்றார். அதாவது அமைச்சரும், முதல்வரும் தாங்கள் இந்தத் தெரிவில் சம்பந்தப்படவில்லை என விசாரணையின்போது தெரிவித்திருந்தனர்.




கணக்காளர் நாயகத்தின் அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து ஒன்ராறியோ முதல்வர் ஓர் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினார். அதில் அவர் இடங்களைத் தெரிவு செய்த முறையில் குறைபாடுகள் இருந்ததை ஒப்புக்கொண்டார்.

ஆனால், அதில் எவ்வித மான ஊழலும் (பணப்பரிமாற்றம்) நடைபெறவில்லை. இது மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வீட்டு நெருக்கடியை உடனடியாகத் தீர்ப்பதற்காக விரைவாக நடைபெற்ற ஒரு செயல்முறை. முன்பிருந்த அரசாங்கங்கள் திட்டமிட்டு செயல்பட்டிருந்தால், எங்களது அரசாங்கத்திற்கு இவ்வாறான ஒரு நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்காது. எமது அரசாங்கம் எம்மால் முடிந்ததை விரைவில் செய்து இந்த வீட்டு நெருக்கடியைத் தீர்க்க முயல்கிறது. இவ்வாறு அவசரமாகச் செயல்படும்போது எங்களுக்கு முன்னேறப் பல வழிகள் உள்ளன எனத் தெரிகிறது. நாங்கள் மிக விரைவில் செயல்பட்டோம், நிச்சயமாக நேரமிருந்திருந்தால் நாங்கள் ஒரு சிறப்பான



Ontario NDP Leader Marit Stiles

செயல்முறையைப் பின்பற்றியிருக்கலாம்.

ஒன்ராறியோ கணக்காளர் நாயகம் தெரிவித்துள்ள 15 பரிந்துரைகளில் 14ஐ நாம் ஏற்றுக் கொள்கிறோம். அவற்றைச் செயல்படுத்துவோம். அவரின் பரிந்துரையான 2,995 ஹெக்ரேசில் வீடுகள் அமைக்கவும், 3,805 ஹெக்ரேசை பசுமைப் பிரதேசத்தில் சேர்க்கவும் எடுத்துக் கொண்ட தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு கூறியதை மட்டும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் எம்மை வலியுறுத்தும் வீட்டு நெருக்கடிக்குத் தீர்வுகாணும் 50,000 வீடுகள் அமைக்கும் இத்திட்டத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வோம் என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தப் பசுமைப் பிரதேசத்தில் இருந்து மீட்கப்பட்ட நிலத்தில் கட்டப்படும் வீடுகளில் 150,000 பேர் வாழ்வார்கள். அதற்குத் தேவையான பூங்கா, தெருக்கள் மற்றும் சுகாதார உள்கட்டமைப்புக்களை அந்த நில உரிமையாளர்களே தங்களது செலவில் அமைப்பார்கள் என்றார்.




கணக்காளர் நாயகத்தின் பரிந்துரையின்படி முதல்வரின் அலுவலகம், “Ontario Integrity Commissioner”இடம் Ryan Amato எவ்வாறு 15 இடங்களையும் தெரிவு செய்தார் என விசாரணை நடத்துமாறு கேட்க உள்ளது.

தற்போதைய ஒன்ராறியோ கணக்காளர் நாயகமான Bonnie Lysykஇன் பதவிக்காலம் 2023 செப்ரெம்பர் 5ஆம் திகதியுடன் நிறைவு பெறுகிறது. இவர் கடந்த 10 வருட காலமாக ஒன்ராறியோவின் கணக்காளர் நாயகமாகப் பதவி வகிக்கிறார்.

# நாமும் நமது இல்லமும் 637

# றியல் எஸ்ரேற் சந்தையில் நீர்க்குமிழி தோன்றுகிறதா?



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

## Is there a bubble in Real Estate Market

அண்மைக்காலத்தில் மக்களின் கேள்விகளாக தொக்கி நிற்பது ரொறொன்ரோ மற்றும் வன்கூவர் நகரங்களில் ஆதன வியாபாரத்தில் நீர்க்குமிழி வெடிக்கும் நிலையில் இருக்கின்றதா?

UBSஇன் உலகளாவிய BUBBLE INDEX -2022இன் அறிக்கையில், உலகளாவிய முக்கிய 25 நகரங்களில் முதல் இடத்தில் இருப்பது ரொறொன்ரோவும் மற்றும் ஆறாவது (6) இடத்தில் வன்கூவரும் இருந்தது.

நவம்பர் 2022இல் பொருளாதார நிபுணர் டேவிட் ரோசன்பெர்க் (David Rosenberg)இன் Toronto Star ஆய்வுக் கட்டுரையின் பிரகாரம், 1980கள் மற்றும் 1990களை விட இப்பொழுது ஆதனவிலை அதிகமாக உள்ளதாகவும், ஆதனவிலையில் இறக்கம் ஏற்படும்போது 1990களில் நடந்ததனை விட மேலதிக இறக்கத்தை எதிர்பார்க்கலாம் எனக் குறிப்பிட்டு இருந்தார்.

ஓகஸ்ற் 2023இன் முதல் வாரத்தில் ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகையில் வந்த செய்தியில், ரொறொன்ரோவிற்கு வடக்கு பகுதியில் இருக்கும் பரீ (Barrie) என்ற நகரில், அண்மைக்கால வட்டி அதிகரிப்பினால், மாதாந்த அடமானக் கடன் கொடுப்பனவாக இருந்த $2850 இன்றைய காலத்தில் $6200ஆக அதிகரித்திருப்பதாக Cora Cook என்ற பெண் தெரிவித்திருந்தார். இதனால் தனது கனவு இல்லத்தை விற்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு தான் வந்துள்ளதாக மிகவும் கவலையுடன் தெரிவித்திருந்தார்.

இன்றைய காலகட்டத்தில் (ஓகஸ்ற் 2023) இதுபோன்ற பலருடைய சோகக்



கதைகளை அறியக்கூடியதாக உள்ளது. மேலும் மூன்று, நான்கு வருடங்களிற்கு முன்பு வாங்கிய பல புதிய ஆதனங்களின் இன்றைய மாதாந்தக் கொடுப்பனவு செய்வதில் மிகவும் இக்கட்டான, கவலையான துர்அதிர்ஷ்ட நிலையில் பல கனடியர்கள் இருப்பதனை கண்கூடாக அறியக் கூடியதாக உள்ளது.

சிறந்த அனுபவமிக்க பல ஆய்வாளர்களின் கருத்தின்படி, இந்நிலைமை 2024இன் இறுதிவரை இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய வட்டிவீத அதிகரிப்பால் ஆதனம் வாங்குபவர்கள் தமது ஆதனம் வாங்குகின்ற எண்ணத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது தெரிய வருகின்றது. அத்துடன் ஆதன முதலிட்டாளர்கள் பெரிய அளவில் முற்றாக சந்தையில் இருந்து விலகியுள்ளார்கள்.

2022இன் ஆரம்பத்தில் விலை அதிகரிப்பு, உச்சகட்டத்தில் இருந்தபோது வட்டிவீத அதிகரிப்பை நிறுத்த மத்திய வங்கி வட்டி வீதத்தைக் கையில் எடுத்தது. அத்துடன் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தத் தொடர்ச்சியான வட்டி வீத அதிகரிப்பு தேவைப்பட்டது.


1989களில் அதிகூடிய எண்ணிக்கையிலான, புதிய அடுக்கு மனைகள் விற்பனைக்கு வந்தபோது, குறிப்பிட்ட விகித அலகுகள் விற்க முன்பே நிர்மாணம் தொடங்கப்பட்டு, கட்டி முடிக்கப்பட்டு விட்டன. ஆனால், அப்பொழுது (90களில்) விற்பனை ஸ்தம்பிதம் அடைந்து விட்டது. ஆனால், இன்றைய காலத்தில் 80%ஆன அலகுகள், ஓர் அடுக்குமனைத் தொகுதியில் விற்கப்பட்டு முடிந்தபின்பே அடுக்குமனையை நிர்மாணிப்பதற்கான வங்கிக் கடன் பெறக்கூடியதாக உள்ளது. இதனால் அதிகளவு மனைகள் நிர்மாணிப்பது தடுக்கப்படுகின்றது.

எனவே கட்டிடத் தொகுதி கட்டி முடிக்கும் போது ஆகக் குறைந்தது 80%ஆன மனைகள் விற்கப்பட்டு இருக்கும். இதனால் நிர்மாண நிறுவனம் திவால் ஆகும். நிலைமை தடுக்கப்படும். எனினும், புதிய வரவாளர்களின் அதிக எண்ணிக்கையின் வருகையால் இருப்பிடத் தேவை அதிகமாகவே காணப்படுகின்றது.

90's நிலைமையை இன்றைய நிலைமையுடன் ஒப்பிடுவதில் சில சிக்கல்கள் உள்ளது. அன்று வட்டி வீதம் 15%இற்கு அதிகமாகவும், பணவீக்கம் 10%இற்கு அதிகமாகவும் இருந்தது. ஆனால், இன்று வட்டி வீதம் 6% அதிகமாகவும், பணவீக்கம் 4%இற்கு அதிகமாகவும் காணப்படுகின்றது.

அன்று சராசரி விலை ஏறக்குறை $300,000ஆகவும் இன்று ஏறக்குறைய $1,000,000இற்கு அதிகமாவும் காணப்படுகின்றது. அன்றைய வருமானம் இன்றுடன் ஒப்பிட முடியாது. எனினும் இன்றைய காலத்தில் ஆதனவிலை பெரிய பெறுமதியில் (விலையில்) இறங்கவில்லை. ஆனால், ஆதன வியாபாரம் குறைந்துள்ளது. இதற்குரிய காரணம், போதியளவு ஆதனங்கள் சந்தைப்படுத்தப் படவில்லை.

நிலைமை இவ்வாறு இருக்க, கனடிய குடிவரவு திணைக்களத்தின் நவம்பர் 2022இன் அறிக்கையில் 2023இல் 465,000, 2024இல் 485,000 மற்றும் 2025இல் 500,000 புதியவர்களை கனடா கொண்டு வர இருப்பதாகத் தெரிவித்திருந்தது. இதனால், தொடர்ச்சியாக மேலதிக ஆதனத் தேவைகள் இருந்து கொண்டே வரும். வட்டி வீதம் குறையத் தொடங்க ஆதன வியாபாரம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.




# தேயிலைத் தோட்டம்



சொர்க்கத்தீவின் உடலைத் தழுவிக்
கொண்டே தோளின்மீது ஏறித் தாவித்
துள்ளிக் குதிக்கின்றாள்
மகாவலிக் குமரிப்பெண்

தேயிலை கொய்யும் கொழுந்துகள்
தென்னிந்திய நாட்டார் இசையைப்
பாடுகின்றன


வெற்றிலை வாயில் வியர்வை வழிகின்ற
நரம்புகள் காட்டும் கால்களில்
அட்டைப்பூச்சிகள் ஊர்வதை உணராமல்
இரத்தம் உறிஞ்சப்படுகின்றது
பிழைப்பு வரவு கடன் சிந்தனையில்.

துணித் தூளிகளே மாளிகையாக
அயர்ந்து உறங்கும்
மழலைச் செல்வங்கள் பெரும்பாலும்
மலையகத்தின் மேடு குளிர் பள்ளத்தில்
வருங்காலக் கூலிகள் ஆகலாம்;

மரக் குற்றிகளைத் தூக்கி ஏற்றி இறக்கி
வேலை செய்து உடலில்
உரசிக் காயப்பட்ட தோலுடன்
உழைத்துக் களைத்துப் பசி உணர்ந்த
தொழிலாள யானைகள்

சரிந்து கிடந்து துதிக்கையால் நீரைப்
பீச்சியடித்து
நீராடி மகிழ்கின்ற
அழகிய ஆற்றங்கரையோர மரங்களில்,

குதூகலமாக அங்குமிங்கும் சிறகடித்துப்
பறந்து விளையாடும்
துன்பம் அறியாத
பலவர்ண இறகுகள் விரிக்கின்ற
பறவை குருவி இனங்கள்
கற்றுத் தருகின்றன
சுதந்திரக் காற்றின் வாழ்வியலை;.!



முத்துராஜா

# சவால்கள் முறியடிக்கப்படவேண்டும்


சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

சவால் என்பதன் பொருள் அறைகூவல். அறைகூவல் எனும் பொருளுடைய சவால் என்பதும் அராபியே. சவால் எனும் சொல் பிற மொழியிலிருந்து வந்து பயன்பாட்டில் உள்ளது. ஆங்கில சவால் என்பதிலிருந்து மொழபெயர்க்கப்பட்ட இந்தச் சொல் 'சவால்' அல்லது 'ஒரு சர்ச்சைக்கான ஒரு குறிப்பிட்ட செயலின் செயல்திறன்'. அறைகூவல் என்றால் அன்று போரில் எதிரியை போரிட அழைப்புவிடுப்பது வீரமரபு. இன்று தம் கருத்தை ஏற்காவிட்டால் விடுப்பது. சவால் ( CHALLENGE) என்பது கடின முயற்சியை எதிர்நோக்கும் பிரச்சனை என்று பொருள். சவால்கள் என்பவை வெளியில் இருப்பதில்லை. அவை எண்ணத்தில் உருவாகுபவை மட்டுமே என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும். தோற்றுவிடுவோமா எனும் நினைப்புத்தான் சவால். எல்லோரும் மலைச்சிகரம் ஏறிவிடுவதில்லை ஏறுவதை இலக்காக நினைத்த டென்சிங், ஹிலாரி போன்றோரே சிகரத்தை அடைந்து கொடி நாட்டினர். முயற்சியின்போது முயற்சி போதவில்லை எனும் நிலைதான் சவால். அதுதவிர நிஜத்தால் சவால் என்று ஏதுமில்லை.




சவால்களுக்கு முகம் கொடுக்க, சமாளிக்க, எதிர்கொள்ள, முடியாத சிலர் தவறான முடிவெடுத்து வாழ்வை தற்கொலையில் முடித்துவிடுகின்றனர். வேறு சிலர் குடும்ப வாழ்க்கையில் பிரிவை ஏற்படுத்திக்கொள்கின்றனர். இன்னும் சிலர் மன அழுத்தத்துக்கு ஆளாகி வாழ்வை தொலைத்து விடுகின்றனர். இவை ஏற்க முடியாதவை. இவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டும். சவால்களை எதிர்கொள்ளும் மனப்பாங்கினை வளர்த்துக்கொள்வது அவசியம். அதன் தொடர்ச்சிதான் தெளிவு பெற்ற மதி. எது சரி? எது பிழை? எது நம்பத்தகுந்தது? எது நம்பக்கூடாதது? எனச் சரியான மதிப்பீடு அவசியம். இந்தச் சரியான மதிப்பீட்டின் வழியாகவே தெளிவினை அடைய முடியும். தெளிவினை அடைந்தால்த்தான் சரியான முடிவினை சவாலின்றி எடுக்க முடியும். முடிவு சரியானதாக இருப்பின் மகிழ்ச்சியும், நிறைவும் கொள்ள முடியும்.

தெளிவுபெறுதல் என்பது, சிலருக்கு சவாலாக அமையும். தங்களுக்கு பிடித்திருக்கிறது என்பதற்காக ஒரு பழக்கத்தை கடைப்பிடித்துக் கொண்டிருக்கலாம். அது தீய பழக்கமாக இருக்க வேண்டியதில்லை. அது நல்ல பழக்கமாகக்கூட இருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் சில முக்கியமான முயற்சிகளுக்காக அந்தப் பழக்கத்தை தொடர இயலாது போகலாம். அதுபோன்ற சந்தர்ப்பங்களில் நீண்டகால பயனளிக்கும் வண்ணம் எந்த முயற்சி அமைகிறதோ அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனும் தெளிவு வரவேண்டும். தங்களுக்கு மிகவும் நெருக்கமானோர் தரும் தகவல்கள் எல்லாம் முற்றிலும் ஏற்கக்கூடியவை எனும் சிந்தனை, எண்ணம் சிலர் மத்தியில் காணப்படுவது தெளிவின்மைத் தன்மையாகும். நாம் எந்த ஒருவர்மீதும் அன்பும், நம்பிக்கையும், அபிமானமும், மரியாதையும் கொண்டிருக்கலாம். அதற்கான காரணங்கள் வேறானவை. இந்த வேறுபாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் நமக்கான முயற்சியால் தரும் அறிவுரைகள், தகவல்கள் நன்மையானவைதான் என எந்தவித ஆராச்சியும் இன்றி ஏற்கவேண்டிய அவசியமில்லை. எதுவாயினும் நம் அறிவினைக்கொண்டு சிந்தித்து அறிவது தெளிவுபெற்ற மதியின் அடையாளமாகும். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு. இப்படியாக நாம் சோதித்து அறியும்போது நிகழும் சவாலுக்கு முகங்கொடுத்து வெல்ல முடியும்.

எமது நம்பிக்கைக்கு முரணாக, மாற்றாக யாரிடமிருந்தாவது கருத்துக்களும், தகவல்களும் கிடைக்கக்கூடும். இப்படியான சூழலை நாம் வரவேற்க வேண்டும். முரண்பட்ட கருத்துக்களால்த்தான் ஓர் எண்ணம் ஆரோக்கியமான கோட்பாடாக வடிவெடுக்க இயலும். சவால்களை பொறுமையாக அணுக வேண்டும். பல பதில்களுக்காக அல்லது பலன்களுக்காக காத்திருக்கும் சந்தர்ப்பங்களில் மன அழுத்தம், பயம், குழப்பம், எரிச்சல், கோபம் போன்ற உணர்ச்சிக் கலவையால் பாதிக்கப்படும் நிலை வரும். இதனை சவாலுக்கு உள்ளாக்காது பொறுமையாகக் கையாள வேண்டும். எதிர்மறையான உணர்வுகள், உணர்ச்சிகளை சிதைக்காவண்ணம் தீர்வு காணவேண்டும்.

தோல்வி குறித்த பயத்துடன் பலர் இருப்பதைக் காணலாம். அவர்கள் எல்லோரும் ஒரேமாதிரியே பேசுவர். எப்படி? இது என் திறமைக்கு அப்பாற்பட்டது, இதெல்லாம் நான் செய்யும் காரியம் இல்லை, இதற்கெல்லாம் தனித்திறமை வேண்டும் என்பதுபோல் பேசிக்கொள்வர். இதெல்லாம் தனது திறமை குறித்த சரியான மதிப்பீடு இல்லாத அல்லது அந்த செயலுக்கு தேவையான முயற்சிகள் குறித்த மதிப்பீடுகளில் இல்லாத நிலையில் உண்டாகும் அச்சம் மட்டுமே. அதுவும் எப்படியான அச்சம்?



இதில் ஈடுபட்டால் தோல்வி ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம். இவ்வாறான சிந்தனை உள்ளவர்களுக்கு இருக்கும் பொதுவான கருத்துக்களாத் தோற்றுப் போனால் பிறர் மதிக்க மாட்டார்கள், தோற்றால் நமக்கு எதிர்காலம் இல்லை, தோற்றால் நம் சொந்தங்கள் அக்கறை காட்ட மாட்டார்கள், தோற்றால் நமக்குத் திறமை இல்லை என்பது தெரிந்துவிடும், தோற்றால் பிறர் கேலி செய்வர், தோற்றால் வேறு எதிலும் முயற்சி செய்ய முடியாமல்போகும் இவை போன்ற அடிப்படை எண்ணங்களால் தோல்வி குறித்த ஒருவித நிரந்தர பயம் மனதில் தங்குகிறது. அது மனப்பாங்காக மாறுகிறது. அதனால் சவால்களை சந்திக்க மறுக்கிறது. இன்றைய பெற்றோர்களை எடுத்துக்கொண்டால், கஸ்டங்கள் தெரியாமல் பிள்ளைகள் சுகமாக வளர வேண்டும் என நினைக்கும் பெற்றோர்கள் ஒன்றை மறக்கின்றனர். எதிர்காலத்தில் கஸ்டங்களையும், பிரச்சனைகளையும், சவால்களையும் எதிர்கொள்ளத் துணிவு இல்லாத பிள்ளைகளை நாம்தான் உருவாக்குகிறோம் என்பதை.

சவால்களை எதிர்கொள்ளும் மனப்பாங்கினை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். வெற்றியும், தோல்வியும் சமம் எனும் யதார்த்தத்தைக் கொண்டு வெல்ல வேண்டும். தோல்வி என்பதும் முயற்சியின் ஒரு வெளிப்பாடு என நினைக்க வேண்டும். தோல்விக்கு யாரைக் காரணம் சொல்லலாம் என நினைக்காது தோல்வியை ஏற்கும் மனோபாவம் வர வேண்டும். தோற்றாலும் தோல்வியில் பாடம் கற்றுக்கொண்டு மீண்டும் சரியாக முயற்சித்து வெற்றிகொள்வோம் எனும் பக்குவம்தான் தோல்வியை வெற்றிக்கு நிகராக மதிக்கும் மனோபாவத்தின் அடையாளம். இந்தப் பக்குவம் தோல்விப் பயத்தைப்போக்கும்.

சவால்களைத் துரத்த, திட்டமிடுதல் எனும் அம்சம் முக்கியம். அதன்படி நாம் செய்யும் செயலின் ஒவ்வொரு நிலையையும் சரிவர திட்டமிட வேண்டும். இப்படி செய்யும்போது எந்தச்செயலுக்கு எந்த விளைவு என்பது சரியாகத் தெரியும். அத்துடன் எந்த விளைவுகளின்மீது எவ்வளவு கட்டுப்பாடு கொண்டிருக்க முடியும் என்பதும் தெரிந்துவிடும். இதனால் விளைவுகள் மீதான கவனம் புரியும். தோல்விப்பயம் குறித்த எண்ணம் மாறும். அத்துடன், உள்நோக்கிய அலசல், வெளி நோக்கிய அலசல் ஆகிய இரண்டு காரணிகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும். எது வந்தாலும் எதையும் சரிவர சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்பதுபோன்ற உள் நோக்கிய அலசலை முயற்சிக்க வேண்டும். செயலின் விளைவுகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் வெளியே என்ன இருக்கின்றன? யாரால் எப்படி இந்தப் பாதிப்புக்களை எமக்கு ஏற்படுத்த முடியும்? என்ற வெளிஅலசலையும் மேற் கொள்ள வேண்டும். இத்துடன் மேற்பாரை என்ற ஒன்றையும் சேர்த்துக் கொண்டால் சவாலை வெற்றிகொள்வது இலகு.

சவாலை வெல்ல, துணிவு அவசியம். துணிவு என்பது எண்ணமல்ல செயல். இது சவால்களை மனக்கலக்கமின்றி சந்திக்கும் மனப்பாங்கை வளர்க்கும். சரியான இலக்கு வகுக்கப்படுமாயின் அதனூடாக திடமான மனப்பாங்கு ஏற்பட்டு தன்னம்பிக்கை மிளிர்ந்து சவாலைச் சந்திக்கும் மனோபாவம் ஏற்படும். ஒருவருக்கு பிரச்சனை வரும்போது அதை பிரச்சனையாக் எடுக்காது சவாலாக எடுப்பாராயின் அதனை வெற்றிகொள்வது இலகு. சிலர் தமக்கு ஏற்படும் அசௌகரியங்களையும் (INCONVENIENCES) பிரச்சனைகள் என நினைத்து மடிந்து போகின்றனர். அசௌகரியங்களை பிரச்சை எனப் பெயரிட்டு வாழ்க்கையைப் பார்த்தால் நீ என்றுமே மகிழ்ச்சியிலிருக்க முடியாது.

சவால்கள் உங்களை பட்டைதீட்டும். உங்களுக்கு இருக்கும் திறமைகளை வெளிக் கொணரும். உங்களை சுற்றி இருப்போரை அடையாளம் காட்டும். பிரச்சனைகளுக்குள் நாம் செல்லக்கூடாது. அது எம்மை தேடிவந்தால் துவண்டு போகாமல் அதை ஒரு சவாலாக ஏற்று தீர்க்க முயலவேண்டும். பிரச்சனைகள் குறித்து உங்கள் அணுகுமுறைகளை மாற்றிக்கொண்டால் நிச்சயம் நீங்கள் சவால்களிலிருந்து விடுபட்டு சாதிக்கலாம்.






# நானிலம் போற்றும் நட்பு - 27



- அகணி -
authorakani@gmail.com

"அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்."(அதிகாரம் பழமை, குறள் 807)' என்ற குறளிற்கு "அன்புடன் தொன்றுதொட்டு வந்த உறவை உடையவர், அழிவுதரும் செயல்களை பழகியவர் செய்த போதிலும் தம் அன்பு நீங்காமலிருப்பர்." என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"அன்பால் தொடரும் நட்பினை உடையவர், தம் நண்பர் தமக்குக் கேடு செய்தாலும், அவரிடம் கொண்ட அன்பிலிருந்து மாறமாட்டார்" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"நட்புத்தன்மையுள்ளவர், பழமையான நண்பர் தீமை செய்தாலும், அவரிடம் கொண்ட அன்பை விட்டுவிடமாட்டார்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்."

"அன்புடன் கூடிய நட்புடையவர் தமக்கு நண்பர் தீமை செய்தாலும் அன்பிலிருந்து மாறமாட்டார்" என்ற அறிவுரையை இந்தக் குறள் தந்துள்ளது.

இப்போது கடந்த இதழில் உரையாடிய பிசிராந்தையார்-கோப்பெருஞ்சோழன் நட்புக் கதை பற்றி தொடர்ந்து உரையாடுவோம்.

கோப்பெருஞ் சோழனின் பிள்ளைகள் தந்தையான அரசனுடன் போர்செய்யத் துணிந்தார்கள். அதனால் கோபம் கொண்ட அரசனும் போருக்கு ஆயத்தமானான். அந்த நேரத்தில் கோப்பெருஞ்சோழனுக்கு அவைப்புலவர் கூறிய அறிவுரையைக் கவனிப்போம்.




"அவரோ உனது மக்கள். நீயோ அவரைப் பெற்றெடுத்தோன். நீ தேடி வைக்கும் செல்வத்தினை ஆளப் பிறந்தவர்கள் அவர்கள் அவர்கட்கு ஆட்சிச் செல்வத்தினைத் தேடிவைக்கும் கடமையுடையவனாய் நீ இருந்து ஈடிலாப் புகழ் பெற்று வாழ்ந்த நீ இறந்த பின்னர் இவ்வரசினை அடைதற்குரியார் அவரேயன்றோ? இவற்றை எண்ணிப் பாராது பெற்ற மக்கள் மீதே போர் கொண்டு எழுதல் அறிவுடைமையாகுமோ? களத்தில் நீ பெற்ற இக் காளையர் இருவரும் இறக்க, நீ வெற்றி பெறுகின்றாய் என்றே கொள்வோம். அவ்வாறாயின், உனக்குப் பின்னர், இந்நாட்டாட்சியினை எவர்பால் அளிப்பாய்? உனக்குப் பின்பு இந்த நாடு, ஆள்வோரைப் பெறாமல் அழிய விடுதல் அறமாகுமோ? அதற்காகவா இத்துணைப் பாடு? மேலும் களம் புகுந்தார் இருவரும் வெற்றி கொள்ளுதல் காணக்கூடாத காட்சியாகும். ஆகவே இரு திறத்தாரும் வெற்றி கொள்ளுதல் இயலாது. உன்னோடு பகை கொண்டு வந்திருப்பார் இருவரும் இளைஞராயும் இருக்க, நீ தனிமையும் முதுமையும் உடையையாதலின் ஒரு வேளை, அவர் வெற்றி பெற, நீ தோற்று நிற்பேயானால், அது உனக்குப் பெரும் பழியாகுமன்றோ? இவற்றை யெல்லாம் எண்ணிப் பாராது போர் கொண்டு எழுதல் அறிவுடைமையாகாது. மேலும், அடைந்தாரைக் காக்கும் அருளும், பிழைத்தாரைத் தெளிவிக்கும் அறிவும் உடைய பெரியோனாகிய நீ, வானுலகோர் வாழ்த்தி வரவேற்க விண்ணுலகம் செல்ல வேண்டுமேயன்றி, மக்களைப் பகைத்து மாண்டான் எனப் பிறர் பழிக்க இறத்தல் கூடாது. ஆகவே, போர் ஒழித்துப் பேரறம் புரிய இன்னே எழுக!" என அவன் உள்ளம் கொள்ளும் அறவுரையினை அழகாக எடுத்துக் கூறினார்.

புலவர் கூறிய அறிவுரையை கேட்ட கோப்பெருஞ்சோழன், போர் புரியும் எண்ணத்தைக் கைவிட்டான். ஆனாலும், தனது பிள்ளைகளின் மாண்பிலாச் செயலால் மனம் வருந்தினான். பெற்றவனைப் பகைக்கும் மக்களைப் பெற்றவன் என்ற பழிச்சொல் கேட்டு நாணமுற்றான். அவன் உள்ளம் மானம் இழந்து வாழ மறுத்தது. தனக்கு நேர்ந்த அப்பழிச் சொல் தன் பகையரசர் காதுகளில் சென்று செல்வதற்கு முன்னரே, உயிர்விடத் துணிந்தான்.

உடனே தனது அவைப் புலவர்களை அழைத்தான். தனது உள்ளத்தில் எழுந்த கருத்தினைத் தெரிவித்தான். வடக்கிலிருந்து உயிர்விடத் துணிந்ததை வகுத்துரைத்தான். அரசன் கொண்டது அறநெறியேயாயினும், புலவர் சிறந்த அரசனை இழக்க விரும்பவில்லை. புலவர், தன் கருத்திற்கு இசையாராதல் அறிந்த அரசன், அரிய ஓர் அறவுரையினை அவருக்கு வழங்கினான். "அன்பும் அறிவும் உடைய புலவர் பெருமக்களே! யானை வேட்டை மேற்கொண்டு சென்றவன், தான் சென்றவினையைத் தப்பாது முடித்து, யானையோடு வருதலும், யார்க்கும் எளிதாய சிறிய பறவை வேட்டை மேற்கொண்டு சென்றவன், அதில் தோற்றுப் பறவை பெறமாட்டாமல் வறிதே வருதலும் உலகில் உண்டு. ஆகவே எண்ணும் எண்ணமெல்லாம் மிக உயர்ந்த எண்ணமாகக் கொண்ட பெரியோர்க்கு ஆகும் காலம் உண்டாயின், அவர் எண்ணியன எல்லாம் எளிதே கைவரப்பெறுதல் உண்டாம். அத்தகையர், விண்ணுல கடைந்து எண்ணிலா இன்பம் அடைதலும், அவ்விண்ணுலகத்தினும் மேலாம் வீட்டுலகம் அடைந்து, பிறவாப் பெருநிலை அடைதலும் எய்துவர். ஒருவேளை அத்தகைய பேரின்ப நிலையினைப் பெறுதல் இயலாது போயின், உலகுள்ளளவும் அழியாது நிற்கும் உயர்ந்த புகழ் பெறுதல் உறுதி. ஆகவே அறிவுடையார், நல்வினையினை எண்ணியபோதே, எண்ணியாங்கே, விரைந்து செய்வர். அத்தகைய நல்லறிவு நன்கு வாய்க்கப் பெறாதாரே, நல்வினை செய்ய வேண்டுமோ? செய்யும் வினையெல்லாம் நல்லவினையாகவே இருத்தல் வேண்டுமோ? ஒரு சில நல்வினை மட்டும் செய்தால் போதாவோ? செய்யும் நல்வினை, செய்ய நினைத்த, இப்பொழுதே செய்து முடித்தல் வேண்டுமோ? சின்னாள் கழித்துச் செய்தல் கூடாதோ?' என்றெல்லாம் ஐயங் கொண்டு, அவற்றில் தெளிவு பெற மாட்டாது அழிவர். யான், அவர் போலும், தெளிவிலா அறிவுடையேனல்லேன். நல்லதன் நலனும், தீயதன் தீமையும் தெளிய உணர்ந்த யான், வடக்கிருந்து உயிர்விட்டு, வாரா நெறியடையும் நல்வினையினை இன்றே புரியத் துணிந்தேன். ஆகவே புலவர்காள்! அதற்கு ஆவன புரிவீராக!" என அறவுரை கூறி வேண்டி நின்றான்.

அரசன் அறிவித்த அறவுரைபற்றிப் புலவர்களும் நன்கு அறிவர். அதனால், வடக்கிருக்கத் துணிந்த வேந்தனைத் தடை செய்யாது, அவனோடு சேர்ந்து தாமும் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தனர். ஆனால், அவருள் பொத்தியார்தம் அருமை மனைவியார், அக்காலை மகப்பெறும் நிலையில் உள்ளார் என அறிந்த அரசன், அந்நிலையில் அவர் அவளுக்குத் துணையாக இருப்பதை விடுத்து, வடக்கிருந்து உயிர் விடுதல் அறமாகாது என உணர்ந்து, அவரை மட்டும், அவரின் மனைவியின் மகப்பேறு கழிந்து வந்து வடக்கிருக்குமாறு வேண்டிக் கொண்டான். உடனே அவர் நீங்கவுள்ள அனைவருக்கும், காவிரியாற்றின் இடையே, ஆற்றிடைக் குறையொன்றில், வடக்கிருத்தற்கு இடம் வகுத்தனர்.

அந்த நிலையில், அங்கு இடம் அமைக்கும் பணி மேற்கொண்டிருந்தவர்களிடம் கோப்பெருஞ்சோழன் சென்று, இடம் அமைக்கும்பொழுது தனக்கு அமைக்கும் இடத்தை அடுத்துத் தன் ஆருயிர் நண்பராய பிசிராந்தையார்க்கும் இடம் அமைக்குமாறு கேட்டுக் கொண்டான். அங்கிருந்த புலவர்கள் அது கேட்டு, "வேந்தே! ஆந்தையார், உன் புகழும், பெயரும் அறிந்தவரேயன்றி, உன்னைக் கண்டு பழகியவர் அல்லர் இதுவரை ஒரு முறையேனும் உன்னைக் காண வந்தாரல்லர். மேலும் அவர் உள்ள இடமோ பாண்டிய நாட்டில், நனிமிகச் சேய்மைக்கண்ணது. இந்நிலையில் நின்னிலை அறிந்து இப்போது வருவதோ, வந்து வடக்கிருந்து உயிர் விடுவதோ இயலுவதன்று. ஆகவே, அவர்க்கென ஓர் இடம் வகுத்தல் வேண்டுவதில்லை," என்றனர்.

புலவர் கூறியதைக் கேட்ட கோப்பெருஞ் சோழன், "அறிவுடைப் பெருமக்களே! பிசிராந்தையார் மிகச் சேய்மைக்கண் உள்ளார் என்பது உண்மையே. என்றாலும் அவர் வருவர். வருவாரா, வரினும் இப்போது வருவாரா என்ற ஐயம் உங்கட்கு வேண்டாம். அவருக்கும் ஓர் இடம் அமைத்து வையுங்கள்," என்றான். கோப்பெருஞ்சோழன் கூறியவாறே, ஆந்தையார்க்கும் ஓர் இடம் அமைத்து விட்டு, அனைவரும் வடக்கிருந்து நோற்கத் தொடங்கினர்.

தன் ஆருயிர் நண்பன் கோப்பெருஞ் சோழனுக்கு உற்றது அறிந்தார் ஆந்தையார் உறையூருக்கு ஓடோடி வந்தார். அவர் வருவதற்கு முன்னரே அரசன் வடக்கிருந்து நோற்றலை மேற்கொண்டது அறிந்து வருந்தினார். அவனோடு வடக்கிருக்கவும் துணிந்தார். அரசன் கருத்தும் அதுவேயென அறிந்து மகிழ்ந்தார். அவன் ஒதுக்கிய இடத்தே இருந்து உயிர்விட்டார். "வருவார்" என்று கூறிய வேந்தன் சொல் வன்மையினையும், அவன் சொல் பழுதாகாவண்ணம் வந்து வடக்கிருந்த புலவர் பேரன்பினையும் வியந்து வியந்து பாராட்டினர் மக்கள்.

கோப்பெருஞ் சோழன் பிறந்த - இடமோ சோழ நாடு அவர் பிறந்த இடமோ பாண்டிய நாடு. இருவரும் ஒருவரையொருவர் பார்த்தவர் அல்லர் ஒருவரோடொருவர் பழகினாரல்லர். இந்நிலையில் இருவர் உயிரும் ஒன்று கலக்கும் உயரிய நண்பராகிவிட்டனர். இந்தக் கதை உண்மை நட்புக்கு அரியதோர் எடுத்துக்காட்டு.

இந்த இதழிலும் திருக்குறளில் நட்பு பற்றிய அறிவுரைகளையும், நட்பு பற்றிய பிசிராந்தையார்-கோப்பெருஞ்சோழன் உண்மைக் கதை பற்றியும் ஆராய்ந்தோம். நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

# இலங்கைக்கு அழைத்துச் செல்கிறோம் என ஏமாற்றிக் கொல்லப்பட்ட வீரப்பன்!

**நேர்காணல்: வால்டர் தேவாரம்** **நேர்கண்டவர்: கண்ணன்**

நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ள 'TheHunt For Veerappan' தொடரால், தமிழ் நாட்டைச் சேர்ந்த சந்தனக் கடத்தல் வீரப்பன் குறித்த செய்திகள் மீண்டும் பேசுபொருளாகியுள்ளது. இந்நிலையில், வீரப்பன் தேடுதல் வேட்டையை தலைமையேற்று நடத்திய, தமிழ்நாடு முன்னாள் காவல்துறை தலைவர் தேவாரம் ஐபிஎஸ்ஸை சந்தித்தோம். வீரப்பன் வேட்டையில் என்ன நடந்து என்பது தொடர்பாக அவர் நம்முடன் பகிர்ந்து கொண்ட தகவல்கள் இதோ;

"தமிழ்நாட்டில் தருமபுரி அருகே உள்ள மேட்டூர்தான் வீரப்பன் சொந்த ஊர். காவிரியின் குறுக்கே மேட்டூரில் அணை கட்டும்போது 25க்கும் மேற்பட்ட கிராமங்கள் அணைப் பகுதி தண்ணீரில் மூழ்கிவிட்டன. இதில் அணையின் வடக்குப் பக்க கிராமங்களைச் சேர்ந்தோர் எல்லோரும் அந்த பக்கமாக இருந்த கர்நாடகா நோக்கி நகர்ந்துவிட்டனர். தெற்குப் பகுதியில் இருந்தவர்கள் தமிழ்நாட்டுக்குள் வந்துவிட்டனர்.

ஆனால், அந்தக் கிராமங்களில் இருந்தவர்களுக்குப் போதுமான இழப்பீடுகள் அரசாங்கத்தால் கொடுக்கப்படவில்லை. அணையால் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளோ, நிலங்களை இழந்தவர்களுக்குப் பதில் நிலங்களோ கொடுக்கப் படவில்லை. எனவே, அந்த மக்களிடம் ஒரு அதிருப்தி இருந்தது. அந்த அதிருப்திக்கு வடிகாலாக இருந்த வீரப்பன் அப்பகுதி மக்கள் மத்தியில் ஒரு தலைவன் மாதிரி உருவாகினான். காட்டுக்குள் சென்று சந்தன மரங்களை வெட்டி வந்து விற்பது, யானையைக் கொன்று அதன் தந்தங்களை விற்பது போன்றவற்றை வீரப்பன் செய்து வந்தான். இதனால் அவனைச் சுற்றி ஒரு கூட்டம் உருவானது.

வீரப்பன் தமிழன் தான் என்றாலும் பெரும்பாலும் கர்நாடகா காட்டுக்குள்தான் இருந்தான். அங்கே கொள்ளையடித்து விட்டு கர்நாடகா மாநில காவல்துறையிடம் இருந்து தப்பிக்க தமிழ்நாட்டுக்குள் வந்துவிடுவான். தமிழ்நாடு காவல்துறையிடம் இருந்து தப்பிக்க கர்நாடகா எல்லைக்குள் சென்றுவிடுவான்.

அப்போது தமிழ்நாட்டு எல்லைக்குள் வீரப்பனுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தவர் அப்பகுதியைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் என்ற மாவட்ட காவல்துறை அதிகாரி. ஒருநாள் கோபாலகிருஷ்ணனுக்கு சவால் விட்டு காட்டுக்குள்



வீரப்பன் ஓர் அறிவிப்புப் பலகை வைத்தான். அதில், 'கோபால கிருஷ்ணா உனக்கு தைரியம் இருந்தால் நீ கர்நாடகா எல்லைக்கு வா' என்று எழுதியிருந்தான். சரியாக திட்டமிட்டிருந்தால் அன்றே வீரப்பனை பிடித்திருக்கலாம்.

ஆனால், கோபால கிருஷ்ணன் உணர்ச்சிவசப்பட்டு, சில காவலர்களுடன், வீரப்பன் சொன்ன இடத்துக்கே கிளம்பி விட்டார். இதனால், வீரப்பன் வைத்திருந்த கண்ணி வெடியில் சிக்கி, 22 காவல்துறையினர் இறந்துவிட்டனர். கோபால கிருஷ்ணனுக்கும் பலத்த காயம். அப்போது காவல் துறையினர் வாகனங்களில் இருந்த ஆயுதங்களைக் கைப்பற்ற வீரப்பன் முயற்சித்தான். அசோக் குமார் என்ற காவல் ஆய்வாளர் தொடர்ந்து துப்பாக்கியால் சுட்டுக்கொண்டே இருந்ததால் அந்த முயற்சி தடுக்கப்பட்டது. இல்லையென்றால் அப்போதே வீரப்பன் இன்னும் பலமாகியிருப்பான்.

இருபத்திரெண்டு காவலர்கள் மரணத்தை யடுத்து தமிழ்நாட்டின் அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதாவும் அன்றைய கர்நாடகா முதலமைச்சரும் சந்தித்துப் பேசினர். தொடர்ந்து ஜெயலலிதா எனக்கு ஒரு குறிப்பு அனுப்பினார். தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மூன்று மாநில காவல் துறையையும் இணைத்து ஒரு சிறப்பு அதிரடி படை அமைக்கப்போகிறோம். நீங்கள் அதில் இருக்க முடியுமா என்று கேட்டிருந்தார். நான் அப்போது ஏடிஜிபியாக இருந்தேன். என் தலைமையில் அந்த சிறப்பு அதிரடிப் படை அமைந்தது.

கர்நாடகாவும் தமிழ்நாடும் சேர்ந்து 4 ஆயிரம் சதுர கிலோமீட்டர் அளவுடைய காட்டில் வீரப்பன் இருந்தான். அத்தனை பெரிய காட்டில் எங்கே வேண்டுமானாலும் அவன் இருப்பான். எப்படி கண்டுபிடிப்பது?

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)




# இலங்கைக்கு...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆனால், இந்த தேடுதல் வேட்டையில் கொஞ்சம் கொஞ்சமாக நாங்கள் வீரப்பனை நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தோம். தினம் துப்பாக்கிச் சூடு இருக்கும். தொடக்கத்தில் 200 பேர் வீரப்பனுடன் இருந்தார்கள். அவர்களை ஒரு வருடத்தில் 20ஆக குறைத்தோம். வீரப்பன் ஆங்காங்கே தங்குவதற்கான குடில்கள் அமைத்திருந்தான். அதையெல்லாம் அழித்தோம்.

வீரப்பன் தம்பி அர்ஜுனன், மனைவி முத்துலட்சுமி உட்பட வீரப்பனுக்கு நெருக்கமானவர்களை எங்கள் கஸ்டடியில் கொண்டு வந்தோம். 5 பேர் மட்டும் கொண்டதாக வீரப்பன் குழு சுருங்கி விட்டது. இவ்வளவு சிறிய கும்பல் ஆனதும் அவ்வளவு பெரிய காட்டில் தேடிக் கண்டுபிடிப்பது சிரமாகிவிட்டது. ஹெலிகாப்டரில் (வானூர்தி) தேடினால்கூட கீழே மரத்தடியில் இருக்கும் ஆள் தெரியாது, அவ்வளவு அடர்த்தியான காடு. ஆனாலும், வீரப்பன் வேட்டை தொடர்ந்தது. அவர்கள் பக்கம் ஐந்து பேர் நான்கு பேர் ஆனது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு திமுக ஆட்சிக்கு வந்தது. இதனிடையே, கன்னட நடிகர் ராஜ்குமாரை வீரப்பன் கடத்திவிட்டான். ராஜ்குமாருக்கு ஏதாவது நடந்தால் கர்நாடகாவில் இருக்கும் தமிழர்கள் நிலை மிகவும் சிக்கலாகிவிடும். கிட்டத்தட்ட ஒரு கோடி தமிழர்கள் கர்நாடகாவில் வாழ்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டின் அன்றைய முதலமைச்சர் மு.கருணாநிதி உத்தரவுப்படி, சிறப்பு அதிரடிப் படை காட்டைவிட்டு வெளியே வந்தது.



மீண்டும் ஜெயலலிதா ஆட்சிக்கு வருவது வரைக்கும் வீரப்பனை பிடிக்க முடியவில்லை. நானும் ஓய்வு பெற்றிருந்தேன். எனவே, என் ஆலோசனையின்படி, விஜயகுமார் தலைமையில் மீண்டும் வீரப்பன் தேடுதல் வேட்டையை தொடங்க திட்டமிட்டார், ஜெயலலிதா. விஜயகுமார் மிக தைரியமான ஆள். அப்போது டில்லியில் ஒன்றிய அரசுப் பணியில் இருந்தார். அங்கிருந்து, அவரை வீரப்பன் தேடுதல் வேட்டைக்காக ஜெயலலிதா வரவழைத்தார்கள். ஆனால், அவராலும் அந்த தேடுதலை வெற்றிகரமாக முடிக்க முடியவில்லை. எனவே, சென்னை ஆணையராக வந்துவிட்டார், இந்நிலையில், மீண்டும் விஜயகுமார் சிறப்பு அதிரடிப்படை தலைவரானதும் வியூகங்களை மாற்றினார். வீரப்பனை காட்டுக்குள் போய் தேடி கண்டுபிடிப்பது கஷ்டம் என்பதால் அவனை வெளியே வரவைப்பதற்கான முயற்சிகளை செய்தார். வீரப்பனுக்கு கண் பார்வை பிரச்சினை இருந்தது. ஹாஸ்பிடல் போய் அதை சரி செய்துவிட்டு, ராமேஸ்வரம் சென்று, அங்கிருந்து இலங்கை சென்றுவிட்டால் விடுதலைப்புலிகள் பிரபாகரன் சேர்த்துக் கொள்வார் என்று வீரப்பனுக்கு நம்பிக்கை கொடுக்கப்பட்டது. இரண்டு காவல்துறை உதவி ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் ஒரு காவலர் வீரப்பனை நெருங்கி இலங்கைத் தமிழர்கள் மாதிரியே நடித்து இதனை செய்தார்கள்.




காட்டைவிட்டு வெளியே வந்த வீரப்பன் வண்டியை ஓட்டி வந்ததும் ஒரு காவல் போலீஸ்காரர்தான். ஒரு புள்ளிக்கு வந்ததும் அவர் வண்டியை விட்டுவிட்டு ஓடிவிட வேண்டும். மோதல் கொலையில் சிறந்தாரான காவல்துறையைச் சேர்ந்த வெள்ளத்துரை அறிவிப்பு கொடுத்ததும், குறிப்பிட்ட இடத்தில் மறைந்திருக்கும் காவல்துறையினர் சுட வேண்டும் என்பது திட்டம்.

திட்டப்படி எல்லாம் கச்சிதமாக முடிந்தது.

அன்று இரவே விஜயகுமார் என்னை தொலைப்பேசியில் அழைத்து அந்த செய்தியை தெரிவித்தார். தமிழ்நாட்டின் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நான் போன் செய்து சொன்னேன். மேலும், நாளை காலை இந்த செய்தியை அறிவிக்கும்போது சிறப்பு அதிரடிப் படையில் கடைசிவரை இருந்த காவல்துறையினர் 190 பேருக்கும் ஒரு பதவி உயர்வும் ஒரு லட்சம் ரூபாய் உதவித் தொகையும் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தேன்.

அடுத்த நாள் ஜெயலலிதா அறிவிக்கும் போது ஒரு பதவி உயர்வும், 3 லட்சம் ரூபாய் உதவித் தொகை மற்றும் ஒரு வீட்டு மனை என்று அறிவித்தார்.

தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா என மூன்று மாநிலங்கள் காவல்துறைக்கு முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக சிம்ம சொப்பனமாக இருந்த வீரப்பன் கதை அதோடு முடிந்தது.”




# குழந்தைகளை மகிழ்விக்கும் டைனஸோக்களின் உலகம்




டைனஸோக்கள் இப்போது உயிரோடு இல்லை என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனால் வரலாறு தெரிந்தவர்கள் அந்த டைனஸோக்கள் உயிர் பெற்று வந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனையாவது செய்து பார்த்திருப்பார்கள். அவர்களின் கனவை நிறைவேற்றும் வகையில் நவீன தொழில் நுட்ப உதவியுடன் அப்படி ஒரு உலகத்தை இப்போது உருவாக்கியிருக்கின்றனர். சென்ற வாரம் டைனஸோ பற்றிக் கனடாவில் நடந்ததொரு காட்சிக்குச் சென்று பார்த்ததை இப்பொழுது உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

டைனஸோக்கள் எப்படி இருந்திருக்கும் என்று பார்க்க விரும்பினால் கனடா, மிஸசாகாவில் இப்பொழுது நடைபெறும் கண்காட்சிச் சாலைக்குச் சென்றால் அங்கு பார்க்க முடியும். (At Square One in Mississauga, located at 199 Rathburn Rd. W. Canada.) நவீன தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக பல கோடி ஆண்டுகளுக்கு முன் பூமியில் வாழ்ந்த டைனஸோக்களை அவை எப்படி இருந்திருக்கும் என்று ஓரளவு கற்பனையில் கணித்து ரோபோக்கள் வடிவில் உருவாக்கியிருக்கிறார்கள். சிறுவர்களுக்கு மட்டுமல்ல பெரியவர்களும் பார்த்து ரசிக்கக் கூடிய வகையில் காட்சியை அமைத்திருக்கின்றர். பெரியவர்களுக்கும் இப்படி ஒரு காட்சியைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. ஏற்கனவே லண்டன், பாரிஸ், மட்ரிட், அமெரிக்காவில் டென்வர், ரெக்ஸாஸ், கொலராடோ, டலஸ் போன்ற இடங்களில் பல பார்வையாளர்களைக் கவர்ந்த கண்காட்சியாக இது இருக்கின்றது.

டைனஸோக்கள் 233 மில்லியன் வருடங்களுக்கு முன் பூமியில் வாழ்ந்ததாக ஆய்வாளர் குறிப்பிடுகின்றார்கள். கடைசி டைனஸோக்கள் 66 மில்லியன் வருடங்களுக்கு முன் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் இருக்கின்றன. பூமியில் புதைந்திருந்த எலும்புக் கூடுகளை ஆராய்ந்து அவற்றில் எத்தனை இனங்கள் இருந்திருக்கின்றன என்பன போன்ற தகவல்களையும் ஆய்வாளர் தந்திருக்கிறார்கள். அவற்றில் சில பெயர்களை ஆங்கிலத்தில் தருகின்றேன். Tyrannosaurus Rex, Stegosaurus, Triceratops. Velociraptor, Diplodocus. கிரோக்க, லத்தீன் மொழிப் பெயர்கள்தான் இவற்றுக்குச் சூட்டப்பட்டன. இவற்றில் இரண்டு வகைகள் இருந்தன, அதில் ஒன்று பறவை இனங்கள் மற்றது மிருக இனங்கள். இப்போது இருக்கும் சில பறவை இனங்கள் முன்பிருந்த டைனஸோக்களின்



பரம்பரையே என்று ஆய்வாளர் தெரிவிக்கின்றனர். தரையில் நடமாடிய சில டைனஸோக்கள் 120 அடி நீளமானதாகவும் இருந்திருக்கின்றன. ஆனால் தற்போது, திமிங்கிலம் பெரிய மிருகமாக இருந்தாலும், தரையில் நடமாடும் மிருகங்களில் இப்போது யானைதான் பெரிய மிருகமாக இருக்கின்றது.

இந்தக் காட்சியில் அசையும் டைனஸோ பறவை இனங்களைக் காணமுடியவில்லை. அவற்றையும் உருவாக்கியிருந்தால் காட்சி இன்னும் நன்றாக அமைந்திருக்கும். ஆனால் டைனஸோ முட்டைகள், குட்டிகள் போன்றவற்றையும் அங்கே காணமுடிந்தது. சிறுவர்களுக்குப் பொழுது போக்குவதற்கும், அறிவியல் சார்ந்து கேள்விகள் கேட்பதற்கும் ஏற்ற வழிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. சிறுவர்களின் கேள்விகளுக்கு அங்கு பொறுப்பாக நிற்பவர்கள் உடனுக்குடன் அவர்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதை அவதானிக்க முடிந்தது.

யுரசிக்பாக் படம் பார்த்தவர்களுக்கு டைனஸோக்கள் எப்படி இருக்கும் என்று ஓரளவு ஞாபகம் இருக்கலாம். ஆனால் அவற்றை இந்தக் காட்சியில் life-sized Velociraptors, a Brachiosaurus, and the most fearsome dinosaur of all, the mighty Tyrannosaurus rex போன்றவற்றைப் பார்க்க முடியும். இப்பொழுது அவை எப்படி இருந்திருக்கும் என்பதை நேரடியாகவே பார்க்கக்கூடிய வசதிகளை மிஸசாகாவில் ஏற்படுத்தி இருக்கிறார்கள். நான் ஹவாய்க்குச் சென்ற போது, ஒருநாள் கௌலா ரேஞ் என்ற இடத்திற்குச் சென்றிருந்தேன். (Kualoa Ranch, on the Hawaiian island of Oahu) நீண்ட காலத்தின் முன்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

# 13ஆம்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

வார்த்தைக் குழுவில் இந்தியத் தரப்பு பிரதிநிதிகள் பங்கேற்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் கட்சிகள் முன்வைக்கலாம்.

13ஆம் திருத்தச்சட்டம் தமிழ் மக்களுக்கான தீர்வு இல்லை என்பது உண்மை எனினும், இதனை ஒரு தொடக்கமாகக் கொள்ளலாம் என்கின்ற கருத்தை நிராகரிப்பதற் கில்லை. தமிழர் பிரதிநிதிகள் இந்தப் பேச்சுவார்த்தைகளில் உச்சக்கட்ட இராஜதந்திரத்தை பிரயோகிக்க வேண்டும்.







# குழந்தைகளை...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

அழிந்து போய்விட்டதாகச் சொல்லப்பட்ட டைனஸோக்கள் எப்படி இருந்திருக்கும் என்பதை அங்கே காணமுடிந்தது. எப்படி என்று நினைக்கிறீர்களா? யுராசிக்பாக் என்ற பதாகை வாசலில் இருந்தது. அங்கிருந்த உயரமான குன்றுகளில் உள்ள காட்டுப் பகுதியில்தான் ஸ் ரீவன் ஸ்பில்பேர்க்கின் நெறியாள்கையில் 1993ஆம் ஆண்டு வெளிவந்த யுராசிக்பார்க் (Jurassic Park) படப்பிடிப்பு நடைபெற்றது. அதில் இடம் பெற்ற வாசல் கதவு, டைனஸோவின் நகக்கீறலுடன் கூடிய மதில் எல்லாம் அப்படியே அங்கே இருக்கின்றன. டைனஸோவின் பெரிய தொரு எலும்புக்கூட்டையும் பெரிதாக அங்கே வைத்திருந்தார்கள். ஏற்கனவே நான் படத்தைப் பார்த்திருந்ததால் எனக்கு அந்த இடங்கள் பழக்கமானதாக இருந்தன.



சமீபத்தில் நாசா நிறுவனம் விண்வெளிக்கு அனுப்பிய ஜேம்ஸ் வெப் தொலை நோக்கியைப் பற்றியும், அது பிர பஞ்சத்தின் தொடக்கத்தைப் பின்நோக்கிச் சென்று அறியப் போவதாகவும் எழுதி யிருந்தார்கள். 'பின்நோக்கிப் பார்ப்பதா?' இது எப்படிச் சாத்தியமாகும்? என்று ஆச்சரியப்பட்டேன். எனது சந்தேகத்தைத் தீர்க்கும் வகையில் பின்நோக்கிப் பார்ப்பது என்பதற்கும் நல்லதொரு விளக்கம் கொடுத்திருந்தார்கள். அதாவது, எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த டையனஸோக்களை 66 கோடி ஒளியாண்டுகளுக்கு அப்பால் இருக்கும் ஒரு நட்சத்திரத்தில் இருந்து மிகச்சக்திவாய்ந்த தொலைநோக்கியால் பார்த்தால், பூமியிலே டைனஸோக்கள் உயிரோடு நடமாடுவதை இப்பொழுதும் காணமுடியும் என்று எழுதி இருந்தனர். நாங்கள் நினைத்தும் பார்க்காத, 'பின்நோக்கிப் பார்ப்பதில்' உள்ள அறிவியல் வளர்ச்சியை ஜேம்ஸ்வெப் விண்வெளித் தொலைநோக்கியின் செயற் பாடுகள் மூலம் அறிந்து கொண்டபோது, அறிவியல் வளர்ச்சியின் வேகம் புரிந்தது.

இந்த டைனஸோக்கள் பற்றிய காட்சியை அவசரப்படாமல் பார்ப்பதானால் சுமார் 45 நிமிடங்கள் தொடக்கம் ஒரு மணித்தி யாலம் வரை எடுக்கின்றது. பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் வரும் 3 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்குக் காட்சி இலவசம். தினசரி காலை 10 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை காட்சி நடக்கின்றது. வர்த்தக நோக்கம் இல்லாமல், சாதாரண கமெராக்களால் உள்ளே படங்கள் எடுக்க அனுமதிக்கிறார்கள். 30 பேருக்குமேல் ஒன்றாகப் போவதானால் முற்கூட்டியே பதிவு செய்து கொள்வது நல்லது. சிலசமயங்களில் காட்சி நேரங்களில் மாற்றம் ஏற்படலாம், அதனால் போவதற்கு முன் எதற்கும் அவர்களுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்வது நல்லது. வாகனத்தரிப்பிடங்களும் போதிய அளவு இருக்கின்றன.



பல நாடுகளில் நடந்த இந்தக் கண் காட்சியை இதுவரை சுமார் 5 மில்லியன் மக்கள் வரை பார்த்திருக்கிறார்கள். வீட்டுக்குள் அடைந்து கிடக்காமல் உங்கள் குழந்தைகளையும் இது போன்ற அறிவியல் காட்சிகளுக்கு அழைத்துச் சென்று காட்டுங்கள். அவர்களின் சிந்தனைகள் பரந்து விரிந்து விருத்தியடைய வேண்டும். தாயகத்தில் கிடைக்காத பல வசதிகள் உங்கள் குழந்தைகளுக்கு இங்கே கிடைத்திருக் கின்றன. இனிமேல் இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமோ தெரியாது, எனவே கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவற விடாமல் உங்கள் குழந்தைகளை அறிவியல் சார்ந்த சிந்தனை கொண்டவர் களாக இந்த நாட்டில் வளர்த்து எடுப்பது உங்கள் கடமையாகும். குழந்தைகளுக் காகவும் உங்கள் நேரத்தைக் கொஞ்சம் செலவிடுவதால், அவர்களை மனதளவில் ஆரோக்கியமான பிள்ளைகளாக இந்த நாட்டில் உருவாக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. உங்கள் ஆசைகளை அவர்களிடம் திணிக்காமல், அவர்களை மகிழ்வோடு வைத்திருங்கள், காரணம் அவர்களின் எதிர்காலம் உங்கள் வளர்ப்பில்தான் இருக்கின்றது.

பேரன்புமிக்க தமிழ் அன்பர்களே!

வணக்கம்.

"தொல்காப்பிய மன்றம்" தன்னார்வத் தொண்டர்களின் அரிய பொதுநலச் செயற்பாட்டால், கடந்த எட்டு ஆண்டுகளாக கனடாவில் இயங்கி வரும் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும்.

நோக்கம் - தொல்காப்பிய மன்றம் தமிழையும் தமிழர் பண்பாட்டையும் புலம் பெயர் மண்ணில் காப்பதற்கும் தக்கவைப்பதற்கும், நீடித்து நிலைபெறவும் குறிப்பாக இளைய தலைமுறையினரிடம் எடுத்துச் செல்வதற்குமாக இயங்கிவரும் ஒரு அமைப்பாகும். செயற்பாடுகள் _ தொல்காப்பிய மன்றம், மாதாந்த கலந்தரங்குகள் மற்றும் ஆண்டுதோறும், சிறார்களுக்கான தமிழ் மொழித் திறன் போட்டி, "தொல்காப்பிய மன்ற விழா" முதலியவற்றை முன்னெடுக்கிறது.

தொல்காப்பிய மன்ற விழா _ எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி நடைபெறவுள்ள தொல்காப்பிய மன்ற விழாவில் "தொல்காப்பிய விழா மலர்" ஒன்று வெளியிடுவதற்கான தீர்மானத்தின் மேலான தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

தமிழ் மொழி, தமிழர் பண்பாடு தொடர்பான பல ஆய்வுக் கட்டுரைகளையும் தகவல்களையும் தாங்கிவரவிருக்கும் இம் மலர் வெளியீட்டின் செலவினத்தை ஈடு செய்யும் முகமாக, அன்பர்கள், மொழி ஆர்வலர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் அனைவரது உதவியையும் மன்றம் நாடிநிற்கிறது.

ஏறக்குறைய 250 பக்கங்கள் கொண்ட இம் மலரில் உங்கள் விளம்பரங்களைப் பதிவு செய்வதன் மூலம் நீங்களும் மன்றத்தின் செயற்பாடுகளில் பங்குகொண்டு ஊக்குவிக்கக் கை கொடுக்கமுடியும். விளம்பரங்கள் யாவும் வர்ணப்படமாக வெளிவரும்.
விளம்பரம் தொடர்பான விபரங்கள் வருமாறு _

1. மலரின் பின் அட்டை $1000
2. மலரின் பின் அட்டை உள் பக்கம் $750
3. மலரின் உள்ளே, முழுப் பக்கம் $500
4. மலரின் உள்ளே, அரைப் பக்கம் $250
5. மலரின் உள்ளே, கால் பக்கம் $150

* சிறு நிறுவனங்கள், தமிழ் வகுப்புக்கள், பாடசாலை பழைய மாணவர் மன்றங்கள் முதலியவற்றின் அங்கத்தவர்கள் இணைந்து அவர்கள் தாபனத்தின் பெயரால் நன்கொடை நல்கலாம்.

* பெயர் வெளியிட விரும்பாத அன்பர்கள் அன்பளிப்புச் செய்யலாம்.
விளம்பரம் தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளுக்கும் பொறுப்பாளர் குமுதினி பொன்னுத்துரை (647-656-6737) அவர்களை நாடவும்.

நன்றியுடன்

முனைவர். செ. ஸ்ரீதாஸ்
தலைவர், தொல்காப்பிய மன்றம், கனடா.
ஆகஸ்டு 10, 2023

# அறிவோம் தெளிவோம்



எல்லோரிடமும் இணக்கமாக இருங்கள். ஆனால் ஒரு சிலரிடம் மட்டும் நெருக்கமாக இருங்கள். உங்களது முழு நம்பிக்கையை அவர்களிடம் வைக்கும் முன், அந்த ஒரு சிலரை நன்றாகச் சோதித்துப் பாருங்கள். உண்மையான நட்பு என்பது மெதுவான வளர்ச்சியுடைய ஒரு செடியாகும். அது முழு வளர்ச்சியைப் பெறுவதற்கு முன்னால் துன்பத்தின் அதிர்ச்சியை அனுபவிக்கவும் தாங்கவும் வேண்டும்.

- நிரஞ்சன்

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.919.1681**

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry & parking. Avail. immediately.
**416.671.7768/416.283.2738**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. Sept. 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.828.5086**

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance & Sep. laundry. Close to TTC & Eraa Supermarket. Avail. immediately.
**647.868.5871/416.292.5871**

**MORNINGSIDE & MCNICOLL**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. Immediately
தொடர்புகளுக்கு: **416.898.1242**

**MCCOWAN & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. September 01, 2023.
**416.556.6003/647.631.8349**

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. Entrance.1 Washroom, parking. Close to school, etc. Available immediately.
**தொடர்புகளுக்கு: 647.296.7932**

**TAUNTON & WESTNEY**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry & new appliances. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **647.657.7191**

**KENNEDY & LAWRENCE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.909.2773**

**MARKHAM & LAWRENCE**
3 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.0231**

33ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## ROOM FOR RENT

**MORNINGSIDE & STAINES**
2 Rooms for rent. Ladies preferred.Close to all amenities. Avail. immediately. தொடர்புகளுக்கு:
**416.848.9697/647. 888.9437**

**MCCOWAN & DENISON**
1 Bedroom for rent in a 2 bedroom bsmt. Shared kitchen & washroom. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.455.6015**

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent in a condo. Shared kitchen, laundry, internet & Sep.washroom. Female only. Avail. Sept. 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.988.4508**

**WARDEN & ELLESMERE**
1 Bedroom for rent in a bsmt. Male preferred. Close to all facilties. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.388.2948**

**MARKHAM & ELLESMERE**
Room for rent with food. Couple / Single preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.667.0482**

**MORNINGSIDE & SHEPPARD**
Master bedroom with washroom for rent in a house. Female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.532.6841**

**MARKHAM & STEELES**
1 Room for rent in upstairs. Utilities, cable & internet included. Single ladies preferred.
தொடர்புகளுக்கு: **416.720.5387**

**MORNINGSIDE & MCLEVIN**
1 bedroom for rent in a house. Parking & laundry. **பெண்கள் விரும்பத்தக்கது.** Avail. immediately.
**416.720.4472 / 416.875.1211**

**MCCOWAN & DENISON**
1 Room for rent in a 5 bedrooms house. **பெண்கள் விரும்பத்தக்கது.** 1 Parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.678.2599**

## ROOM FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
One room for rent in a 2 bedroom bsmt. Sep. entrance & laundry. Working male preferred. Avail. immediately.
**416.502.3048 /416.409.5286**

**BRIMLEY & EGLINTON**
1 bedroom for rent in a bsmt. Sep. entrance. Working / students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

**MORNINGSIDE & SHEPPARD**
Multiple bedrooms with washrooms for rent in a house. Student / working ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.802.8288**

**WARDEN & FINCH**
1 bedroom for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.983.7270**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & ELLESMERE**
2 bedroom brand new bsmt for rent. City permitted. Sep.entrance, 2 full washrooms & internet. 10 mins. walk to U of T. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.201.6075**

## BASEMENT FOR RENT

**VARCOE & KING ST. (HWY 2) OSHAWA**
1 bedroom bsmt for rent. Students /couple preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.473.4717**

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom basement for rent.
STAINES & MORNINGSIDE
2 Bedroom walkout basement for rent.
3 Bedrooms house for rent.
Contact: **647.686.8590**

## HOUSE FOR RENT

**MARKHAM & DENISON**
4 Bedroom house for rent. 2.5 washrooms & parking. Close to School, shoping & all other facilities. Avail. immediately.
**Call Haran: 416.880.4829**

**SIMCOE & ADELAIDE (OSHAWA)**
3 Bedroom house for rent. Parking. Close to School, shoping & all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.764.1649**

**MORNINGSIDE & MC.NICOLL**
3 Bedroom house for rent. Close to TTC & all otherfacilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.722.5519**

## BASEMENT FOR RENT

1 Bedroom + Den bsmt for rent. Sep. entrance, parking, No pets & No Smoking. Students or couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.931.3444**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt plus living room with Seperat entrance. School is near by & TTC is near by. Walmart and other Srilankan groceries also nearby.
Cell: ***416-857-4619*** Rajah

## BASEMENT FOR RENT

**HWY 401 & WESTNEY (AJAX)**
Brand new 2 bedroom bsmt for rent. Sep.entrance, parking & sep. laundry. Close to all facilities. No pets / No smoke. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **416.999.3878**

## BASEMENT FOR RENT

**STEELES & STAINES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Sep. laundry & parking. Close to TTC, School & all other facilities. No pets / no smoke. Avail. immediately
**416.728.2281 / 647.972.6250**

மேலும் பக்கங்கள் 13,14,15

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVE.**

2 Bedroom bsmt for rent. Sep.entrance, sep. laundry & parking. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.631.5745**

## ROOM FOR RENT

**MARKHAM & EGLINTON**

1 master bedroom for rent in a 2 bedroom apartment. Few steps to the TTC bus stop. Close to all facilities. Avail. Sept. 01, 2023.

தொடர்புகளுக்கு: **416.302.0847**

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் 38 வயதான (Graduated in Medical office administration) பெண்ணுக்கு மணமாகாத 38 - 42 வயதுள்ள Roman Catholic மணமகனைத் தேடுகிறோம்.

**416.551.9737 / 647.937.1243**

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் 31 வயதான (Master Graduated in Sosial Work - working at hospital) பெண் ஒருவருக்கு 31 - 36 வயதுள்ள செவ்வாய் தோசமுள்ள மணமகனைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு: **437.224.4754**

## BASEMENT FOR RENT

**CASTLEMORE & ROY RAINEY (MARKHAM)**

2 bedroom + Den bsmt for rent. Sep. entrance & laundry. Couple/family preferred. No pets / No smoke. Close to all facilities. Avail. Sept. 01, 2023.

தொடர்புகளுக்கு: **647.205.8317**

## CONDO. ROOM FOR RENT

**MARKHAM & EGLINTON**

1 bedroom for rent in a 2 bedroom condo. Parking & internet. Close to all facilities. Avail. immediately.

**தொடர்புகளுக்கு:647.394.3535**

## JOB AVAILABLE

Need a **COOK** immiediately in community housing for elderly people in Thunder bay, Ontario. Must live in one unit. Need experience. The salary would be discussed.

**647.205.4615/647.471.3909**

## மணமகள் தேவை

கனடாவில் வாழும் திருமணமாகத 45 வயதான (Graduated with B.Com. Degree) ஆண் ஒருவருக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு: **437.545.9472**

## BASEMENT FOR RENT

**NEILSON & HWY 401**

3 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry & internet. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.726.6193**

## HOUSE FOR RENT

**MIDLAND & STEELES**

3 bedrooms bungalow house for rent. Close to school, TTC & all other facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.908.6810**

## வாகனப் போக்குவரத்து

கட்டுநாயக்கா விமான நிலையம் - யாழ்ப்பாணம் - கொழும்பு மற்றும் குறுகிய நீண்ட தூர பிரயாணங்களிற்கு **FOR ALL YOUR TRAVEL NEED IN SRI LANKA** அழையுங்கள்

**647.447.8549/077.366.1703**

## MEENA'S KITCHEN

உங்கள் சகலவிதமான வைபவங்களிற்கும் தேவையான உணவு வகைகளும் இலங்கை இந்திய முறைப்படி சுடச்சுடச் சமைத்து வழங்கப்படும். Home made food small or big orders & Daily meals. அழையுங்கள் **Meena's Kitchen.**

**647.561.4946**

## ROOM FOR RENT

**KINGSTON & SHEPPARD**

1 Room for rent in a house - upstaris. Working ladies preferred. Close to all facilities. Avail. Sept. 01, 2023.

தொடர்புகளுக்கு: **416.298.0134**

## HOUSE FOR RENT

**Brock Road & HWY 2 – Pickering**

3 Bedrooms & a den Town house for rent. Avail. Sept. 01, 2023. Spacious Kitchen, Living Room & Visitor Room. Close to all amenities. Rent $2,950.

**647.960.6427 or 416.671.0085**

## BASEMENT & ROOMS FOR RENT

**MORNINGSIDE & STAINES**

2 bedroom bsmt for rent . Sep.entrance, parking, laundry & internet. Close to all facilities. Avail. Immediately.

**ALSO** Multiple bedrooms with washrooms for rent in upstairs. Students / working ladies preferred.

தொடர்புகளுக்கு: **647.561.4946 / 647.856.4678**

## ROOM FOR RENT

**PHARMACY & LAWRENCE**

1 Room for rent in a 3 bedroom bsmt. Student / Bachlor/couple preferred. Close to School & TTC, Grocery stores. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.708.3444**

## HOUSE/ BASEMENT FOR RENT

**WARDEN & LAWRENCE**

3 Bedrooms newly renovated bunga low house for rent. **Also** 3 bedrooms bsmt for rent. Sep. entrance, sep.laundry & parking. Close to TTC & all the facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.569.0657**

## HOUSE & BASEMENT FOR RENT

**NEILSON & SHEPPARD**

3 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. Immediately.

**A HOUSE FOR RENT IN AJAX– ROSSLAND & CHURCH**

**4 Bedrooms, 3 washrooms & 3 car parking.**

தொடர்புகளுக்கு: **416.509.7247**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & OLD FINCH**

2 Rooms for rent in a house - upstaris. Ladies preferred. Close to all facilities. Avail. immediately.

**647.540.4618 /416.305.4773**

## வாடகைக்கு

4 BR, 3 BR, 2 BR, 1 BR House, Condo, Basement

**647-861-8240**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**

Multiple bedrooms available with bathroom & kitchen. **தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும்.** Close to TTC (2 Buses). Contact owner about renting price.

தொடர்புகளுக்கு: **416.908.9494**

## JOBS AVAILABLE

**COURTIES (5 mins. from Oshawa)**இல் அமைந்துள்ள **Anchor Point Fusion Bar and Grill**இற்கு **KITCHEN COOK**தேவை. Full time position. Also looking for a **HOUSE KEEPER** to do cooking & cleaning. 3 days per week & 5 hrs. a day. Prefer Monday, Wednesday & Friday 10am - 3pm. Will pay $1000 Cash per month - Permanent Job. அனுபவம் உள்ளவர்களும் ஆர்வம் உள்ளவர்களும் தொடர்புகொள்ளவும்.

**416.618.6704**

## BASEMENTS & HOUSE FOR RENT

(1) **Ajax** Basement Available Salem & Taunton,1 bedroom, kitchen, 1 washroom separate entrance, Two car parking. (2) **Pickering** House & Basement Available. Whites Road& Taunton 3 bedroom house & 2 washroom. 2 bedroom,1washroom, sep. entrance, 2 car parking. (3) **Markham** Basement - 2 bed room,1washroom, Kitchen sep. entrance. தொடர்புகளுக்கு: **647. 282.5782**

## HOUSE & CONDO. FOR RENT

**9TH LINE & 14TH AVENUE HOUSE FOR RENT.**
Fully Upgraded 4 bedroom & 3 washrooms Semi detached House ,hardwood Floor throughout Main Level. Well maintained And Move In Condition.

**1 Bedroom + Den Condo for rent in Mississauga. Near to Square one**, 1050 Sqft., Luxury and elegance amenities. All utilities included, including Cable TV, 7 High Speed Internet. 2 Parking & 1 locker

**Please call: 416.918.9848 / 416.857.7603**

## BUS SERVICE

**RAINBOW CHARTER SERVICE INC. (SCARBOROUGH)**
உங்கள் பயணத் தேவை எதுவானாலும் அழையுங்கள்.
**Please call or text me : 416.451.0055**
**info@rainbowcharterservice.ca**




## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.
**647.512.9820/647.868.2440**

## COMMERCIAL BASEMENT FOR RENT


**KENNEDY & EGLINTON (North West Corner , Scarborough)**
1000 sq. feet basement hall is for rent. $1100 per month including utilities. Good for having Music / Dance classes or any similar private classes or office space such as Tax Firm. Available immediately.
1000 சதுர அடி கொண்ட நில கீழ்அறை வாடகைக்கு உண்டு. ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**Please Call Kiruba at 416.828.5019**

## JOBS AVAILABLE

**HIRING FULL TIME & PART TIME COOKS for a Canadian take-out Restaurant in Down Town, Toronto.**
Full time / part time positions available.
7 days a week, 11 am to 12am.
Minimum 2 years experience required.
அனுபவம் உள்ளவர்களும் ஆர்வம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும்.
**Nishan: 647.226.7742**

*For your Special Occasions*

**SHORT TERM RENTAL**
**TORONTO**
Large House available for your Special Occasions Short Term Rental in Scarborough. Daily rental possible.
If Interested email :
georgeparan1@gmail.com



## JOBS AVAILABLE

**Need a female caregiver to take care of 65 year old woman in OSHAWA. Includes assist with giving medications, cooking & cleaning Looking for coverage from 10AM to 4PM. Monday to Friday.**
வயோதிப பெண் ஒருவருக்கு உணவு தயாரித்தல், துப்பரவாக்கல் போன்ற பராமரிப்புத் தேவைகளுக்காக பெண் பராமரிப்பாளர் ஒருவர் தேவை. பராமரிப்பாளர் வருகை தரவேண்டிய நாட்கள் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை. முற்பகல் 10:00 மணி முதல் பிற்பகல் 4:00 மணிவரை. **Please call: 647.998.5403**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

**We are working with a group of students who are looking to rent rooms, house or basement apartments in Scarborough and surrounding area.**
உங்களது **rooms, house or basement**இனை சட்டரீதியாக **University / College Students** இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட
**Logee - 416.272.6811 / Hari - 647.262.8490**
**HomeLife Future Realty Inc. Brokerage**


# நினைவேந்தல்-மக்களின் மனம் அறிந்த கலைஞன்!

## நேர்காணல்: திரைப்பட இயக்குநர் வி. ஜெயபிரகாஷ் நேர்கண்டவர்: கண்ணன்

வடிவேலு நடித்த நகைச்சுவை கதா பாத்திரங்களிலேயே அதிகம் பிரசித்தி பெற்றது 'காண்ட்ராக்டர் நேசமணி' பாத்திரம்தான். ஒப்பந்தாரர் நேசமணியின் அத்தனை வசனங்களும் 'மீம்ஸ்'களாக வடிவேலுவை இத்தனை ஆண்டுகள் மக்கள் மனதில் மறக்காமல் வைத்திருக்க காரணமாக இருந்துள்ளன. அந்த 'காண்ட்ராக்டர் நேசமணி' பாத்திரத்தை செதுக்கிய சிற்பி இயக்குநர் சித்திக் காலமாகிவிட்டார்.

திரைப்பட இயக்குநர் சித்திக், கேரளம் மாநிலம் கொச்சியில் 1954 ஆகஸ்ட் 1ஆம் தேதி பிறந்தவர். அப்பா பெயர், இஸ்மாயில் ஹாஜி, அம்மா ஜைனபா. களமச்சேரி புனித பால் கல்லூரியில் படித்து முடித்த பின்னர், 1983இல், நடிகர் பகத் ஃபாசில் தந்தையும் பிரபல மலை யாள மூத்த இயக்குநருமான ஃபாசிலிடம் உதவி இயக்குநராக தனது திரைத்துறை வாழ்க்கையைத் தொடங்கினார். அதற்கு முன்னதாகவே, கேரளாவில் பிரபலமான கொச்சி கலாபவன் கலைக் குழுவில் சித்திக்கும் லாலும் நடித்துள்ளதை ஃபாசில் பார்த்து ஈர்க்கப்பட்டிருந்தார். எனவே, இவர்களை தன்னுடன் இணைத்துக்கொண்டார்.



ஃபாசிலிடம் இருந்து வெளியே வந்த பின்னர் சித்திக்கும் லாலும் இணைந்து சித்திக்-லால் என்ற பெயரில் படங்களை இயக்கினர். மற்றவர்கள் படங்களுக்கு திரைக்கதையும் எழுதினார்கள்.

இவர்கள் முதல் படம் மலையாளத்தில் வெளியான 'ராம்ஜி ராவ் ஸ்பீக்கிங்' (1989). பெரிய வெற்றி. தொடர்ந்து 'இன் ஹரிஹரன் நகர்', 'காட்பாதர்', 'வியட்நாம் காலனி', 'ஹிட்லர்', 'கிங் லயர்', 'பிக் பிரதர்' உட்பட 1989 _ 95 காலகட்டத்தில் இவர்கள் மலையாளத்தில் இயக்கிய படங்கள் அனைத்துமே வெற்றிப் படங்கள் தான்.

பின்னர் இருவரும் பிரிந்தனர். சித்திக் இயக்குனராகத் தொடர்ந்தார். (லால், நடிப்பு மற்றும் தயாரிப்பில் கவனம் செலுத்தினார். தமிழிலும் லால் நிறைய படங்களில் நடித்துள்ளார்.)

தமிழில் சித்திக்கின் முதல் படம் விஜய், சூர்யா நடிப்பில் வெளியான 'ஃப்ரெண்ட்ஸ்.' இப்படம் பெரும் வெற்றி பெற்றது. வடிவேலுவின் 'காண்ட்ராக்டர் நேசமணி' பாத்திரம் இப்படத்தில்தான் இடம்பெற்றிருந்தது. தொடர்ந்து பிரசன்னா நடித்த 'சாது மிரண்டா', விஜய் நடித்த 'காவலன்', அரவிந்த்சாமியின் 'பாஸ்கர் ஒரு ராஸ்கல்', விஜயகாந்தின் 'எங்கள் அண்ணா' ஆகிய படங்களை இயக்கினார்.

சித்திக்கின் முதல் படமான 'ராம்ஜி ராவ் ஸ்பீக்கிங்' மலையாள படத்தின் மறு உருசாக்கம்தான் தமிழில் பிரபு, ரேவதி நடிப்பில் வெளியான 'அரங்கேற்ற வேளை'. இவரது 'நாடோடிக்காற்று' படம்தான் தமிழில் பாண்டியராஜன், எஸ்.வி. சேகர் நடிப்பில் 'கதாநாயகன்' என்று வெளியானது. இரண்டுமே நகைச் சுவைக்குப் புகழ்பெற்றவை.

சித்திக்கின் அனைத்து படங்களிலும் நகைச்சுவை பிரதானமாக இருக்கும். தமிழில் சித்திக் இயக்கிய 'ஃபிரண்ட்ஸ்' மட்டுமல்ல 'எங்கள் அண்ணா' நகைச் சுவை காட்சிகளையும் எப்போது பார்த்தாலும் சலிக்காது. விஜய்யின் 'காவலன்' படத்திலும் வடிவேலு காட்சிகளை மறக்க முடியாது.

தமிழில் சித்திக் நேரடியாக இயக்கிய படங்களும்கூட பெரும்பாலும் அவரது

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

NIRUTHAN NADARAJAH

(Licenced Insurance Agent)

Insurance Products & services offered



**Insurance**

- Life Insurance
  - Term
  - Whole Life
  - Universal Life
- Accident & Sickness Insurance
  - Medical
  - Disability
  - Critical Illness
- Travel Insurance
  - Visitors
  - Supper Visa
  - International Student
- Group Insurance

**Investment**

- RESP
- RRSP
- TFSA
- Segregated Funds
- Annuity

Part Time Job / பகுதி நேர வேலை வாய்ப்பு

நீங்களும் ஒரு பகுதி நேர அல்லது முழு நேர பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி முகவராக பணிபுரிந்து சிறந்ததொரு வருமானத்தை ஈட்ட முடியும்

மாதம் $5000 முதல் $10,000 வரையிலான வருமானத்தை இலகுவாக ஈட்ட முடியும்

**What we offer...**

- Free Information
- Free Advice
- Free guidance
- Free Coaching
- Free Training
- Low Start up cost

**What you Achieve...**


- Financial Literacy
- Financial Security
- Financial Freedom
- Own Your Future

Contact
Niruthan Nadarajah (NR)
647-534-1819
wecare@nrlifegroup.com

Secure yourself and your loved ones

What you need is what we do


## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

- சிவகுமார் -

# நல்ல நட்பை இழந்துவிடாதீர்...!

ஒருமுறை சோக்ரட்டீஸ் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும்போது ஒருவர் வந்து அவருடைய நண்பரைப் பற்றி ஏதோ கூற முயன்றார். உடனே சோக்ரட்டீஸ் அவரிடம்,"என் நண்பரைப் பற்றி என்னிடம் கூற விரும்பினால் அதற்கு முன் 3 கேள்விகளை கேட்பேன். மூன்று கேள்விக்கும் 'ஆம்' என பதில் இருந்தால் மட்டுமே நீங்கள் அவரைப் பற்றி கூறலாம்" என்றார்.

சோக்ரட்டீஸ் முதல் கேள்வியை கேட்டார்

1). "அவர் செய்த செயலை நேரடியாகப் பார்த்துவிட்டு தான் அவரைப் பற்றி கூறுகிறாயா...?" என்று கேட்டார்.
"இல்லை" என பதில் சொன்னார்.

2). "அவரைப் பற்றிய நல்ல விஷயத்தை கூறப்போகிறாயா...?" என்று இரண்டாவது கேள்வியைக் கேட்டார்.

"இல்லை என பதில் சொன்னார்."
3). "அந்த நண்பரைப் பற்றி கூறினால் யாராவது பயனடைவார்களா...?" என்ற மூன்றாவது கேள்வியைக் கேட்டார்.
"இதற்கும் இல்லை" என்றே பதில் வந்தது."

"யாருக்கும் பயனில்லாத," "நல்ல விஷயமுமில்லாத," "நேரடியாக நீங்கள் பார்க்காத," "என் நண்பரைப் பற்றிய சம்பவத்தை தயவு செய்து என்னிடம் கூறாதீர்கள்" என்றார்.

நல்ல நட்பு ஆரோக்கியமான விவாதங்களையே மேற்கொள்ளும். நண்பர்கள் ஹைட்ரஜன் வாயுவினால் நிரப்பப்பட்ட பலூன் போன்றோர்.'நீங்கள் விட்டு விட்டால் எங்கோ பறந்து சென்று விடுவர்.' பத்திரமாக பிடித்துக் கொள்ளுங்கள்!

உலகில் சிறு தவறுகூட செய்யாதவர்களே இல்லை. மேலும் மன்னிக்க முடியாத குற்றம் என்றும் ஏதுமில்லை. எனவே, வார்த்தைகளால் யாரையும் பழிக்காதீர்கள். வசவுகளால் இதயங்களை கிழிக்காதீர்கள். நல்லுறவை வன்முறையால் இழக்காதீர்கள். நட்புறவை இழி மொழியால் துளைக்காதீர்கள்.

மனிதர் இரத்தமும், சதையும், உணர்ச்சிகளாலும் உருவாக்கப்பட்டோர். நீங்கள் யாரையும் இழந்து விடாதீர்கள்.


wpm Property Management

Unit #210 - 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**WE ARE HIRING Admin Job**

**Scarborough**வில் உள்ள **Property Management Company**க்கு பெண் காரியதரிசி தேவை. **solving & good communication skills in English** & அத்தோடு தமிழ் பேசவும் தெரிந்திருத்தல்

- Previous Admin & Telemarketing experience
- Drivers License
- Fixed office hours plus few after hours job
- Willingness to learn and works as a team
- Suitable job for Ladies

**Rental Guarantee**

வாடகைக்கு இருப்பவர்கள் வாடகை தாராவிடின் மாதா மாதம் உங்கள் வாடகை பணம் கிடைப்பதற்கான உத்தரவாதம் உண்டு. விபரங்களை அறிய எமக்கு ஈமெயில் செய்யவும். முகவரி: invest.karukandiah@gmail.com

**Available for Rent**

Markham – Bayview/Steeles - Bsmt - (1Brm + 1Bath) [$1,750/m]
Oshawa – Simcoe /Conlin-Detached-(4+2Brm + 4Bath) [$3,450/m]
Bowmanville –HWY2/Trulls Rd-Detached-(3+2Brm +2Bath) [$3,400/m]
Courtice – Old Varcoe/Centrefield Dr – Bsmt (1Brm + 1Bath) [$1,500/m]
Toronto – Yonge/Finch Ave – Condo - (2Brm + 1Bath) [$3,100/m]
PIckering – Liverpool/Finch Ave – Detached (3Brm + 2Bath) [$3,200/m]

**Seminar for Real Estate Investment**

Investment Property வாங்க இது நல்ல தருணமா?
எந்த இடத்தில், எப்படியான Property வாங்குவது நல்லது?
Investment Propertyக்கு Mortgage எடுப்பதில் சிரமம் உண்டா?
tax implications என்ன? Please register for seminar, invest.karukandiah@gmail.com

**BUY / SELL/ LEASE / INVEST**

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

கரு கந்தையா - 416.616.7278   Watson Property Management - 416.284.9999

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

# நினைவேந்தல்...

14ம் பக்கத்தொடர்ச்சி

மலையாளப் படங்களின் மறு உருவாக்கம் தான். மலையாளத்தில் அவர் இயக்கிய 'பாடிகார்ட்' படம்தான், தமிழில் விஜய் நடிப்பில் 'காவலன்' என்ற பெயரில் சித்திக்கால் மறு உருவாக்கம் செய்யப் பட்டது. இந்தியில் சல்மான்கான் நடிப்பில் 'பாடிகார்ட்' என்ற பெயரிலேயே மறு உருவாக்கம் செய்தார்.



மலையாளம், தமிழ், ஹிந்தி தவிர தெலுங்கிலும் சித்திக் படங்களை இயக்கியுள்ளார்.

சித்திக்குக்கு, 1984 மே 6இல் திருமண மானது. சஜிதாவை மணந்தார். இவர்களுக்கு சுமயா, சாரா, சுகோன் ஆகிய மூன்று மகள்கள் உள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக, நிமோனியா வால் பாதிக்கப்பட்டு கல்லீரல் தொடர்பான நோய்களுக்கு சித்திக் சிகிச்சை பெற்று வந்தார், சித்திக். இந்நிலையில், 7-8-23 (திங்கட்கிழமை) அன்று மதியம் திடீரென சித்திக்குக்கு மாரடைப்பு ஏற்பட்டது. உடனே கொச்சியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். வெண்டிலேட்டர் (ECMO – Extracorporeal membrane oxygenation) ஆதரவுடன் ஆபத்தான நிலையில் இருந்தவர் சிகிச்சை பலனளிக்காமல் காலமானார்.

சித்திக் மறைவுக்கு கேரள முதல்வர் பினராயி விஜயன், நடிகர்கள் மோகன்லால், மம்மூட்டி, துல்கர் சல்மான், தமிழ் நடிகர்கள் சூர்யா, விஜயகாந்த் எனப் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

சித்திக்கின் 'ஃபிரண்ட்ஸ்' படத்தில் நடித்துள்ள சூர்யா, அவரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளதுடன் 'ஃபிரண்ட்ஸ்' படத்தில் பணியாற்றியதை உருக்கமாகப் பகிர்ந்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்விட்டில், 'என் இதயம் கனமாக இருக்கிறது. சித்திக் சாரின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பு. 'ஃபிரண்ட்ஸ்' படம் பல்வேறு வழிகளில் எனக்கு ஒரு முக்கியமான படம்.

சித்திக் சார் இயல்பாகவே ஒரு ஊக்கமளிக்கும் மனிதர். படப்பிடிப்பின் போது நடிப்பில் சிறிய முன்னேற்றம் செய்தாலும் நடிகர்களைப் பாராட்டுவார். படப்பிடிப்பைத் தாண்டி எடிட் செய்யும் போதும், எனது நடிப்பு குறித்த தனது அபிப்ராயங்களை அன்புடன் தெரிவிப்பார்.

'ஃபிரண்ட்ஸ்'படம் பண்ணும்போது அவர் புகழ்பெற்ற மூத்த இயக்குநர். ஆனால், அவர் தனது நட்பு அணுகுமுறையால் படப்பிடிப்பின் போது அனைவரையும் சமமாக நடத்துவார். படப்பிடிப்பில் அவர் கோபமாகவோ குரலை உயர்த்தியோ நான் பார்த்ததில்லை. அவருடன் பணிபுரிவது என்றென்றும் நான் விரும்பும் அனுபவம். நான் அவரைச் சந்திப்பதற்கு முன்பு என்னிடம் இல்லாத ஒன்றை அவர் எனக்குக் கொடுத்தார். என்னையும் என் திறமையையும் நம்புவதற்கான உள்நம்பிக்கையை அவர் கொடுத்தார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

சித்திக் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்துள்ள 'நண்பகல் நேரத்து மயக்கம்' படத்தின் வசனகர்த்தா ஜெயக்குமார் மண்குதிரை, 'ராம்ஜிராவ் ஸ்பீக்கிங்' தொடங்கி மலையாளத்தின் புதிய நகைச்சுவை பாணியை உருவாக்கியவர் சித்திக். லாலுடன் இணைந்து தொடக்கத்தில் வாய்ப்பு தேடிச் சென்றபோது, 'கோடம்பாக்கம் பாலம் ஏறிப் பழகாத நீங்கள் கதை சொல்ல வந்துவிட்டீர்களா?' என ஏளனப்படுத்தியவர்கள் பலர். பல முன்னணி நடிகர்கள் மறுத்த நிலையில் முகேஷ் போன்ற இரண்டாம் நிலை நாயகனை வைத்து 'இரண்டாவது ஓணம்' என்ற வெற்றிப் படத்தை அளித்தார்கள். ஜனங்களின் மனம் அறிந்து வெற்றிகளைத் தந்த கலைஞன் சித்திக்' என்று பதிவிட்டுள்ளார்.

உண்மைதான்; போய் வாருங்கள் சித்திக்!






# மாவீரன் - திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

சத்யா (சிவகார்த்திகேயன்) பத்திரிகை யொன்றுக்கு கார்ட்டூன் (Cartoon) வரைபவராக வேலை செய்கிறார். அவர் மாவீரன் என்ற கதாநாயகன் பற்றிய கதையை உருவாக்கி அதற்குப் படங்களையும் வரைகிறார்.

இதே நேரம் சத்யா தனது அம்மா மற்றும் தங்கையுடன் வாழும் சிறிய வீட்டிலிருந்து குடும்பத்துடன் அரசாங்கத்தால் வெளி யேற்றப்படுகின்றனர். அரசாங்கம் அவர்களை இலவசமாக ஓர் அடுக்கு மாடிக் கட்டிடத்திற்கு மாற்றி விடுகின்றனர். இவர்களது குடும்பத்துடன் அவரது அயலவர்களும் இக்கட்டிடத்திற்குக் குடியேறுகின்றனர்.

ஆனால், குடியேறி சில நாட்களிலேயே கட்டிடத்தில் பல்வேறு பொருட்கள் கழன்று விழத் தொடங்குகின்றன. அக்கட்டடம் சரி யாகக் கட்டப்படவில்லை எனத் தெரிய வருகிறது.

சத்யாவின் தாய் இப்பிரச்சினையைத் தீர்க்கப் போராட விரும்புகிறார். ஆனால், மிக அமைதியான குணமுடைய சத்யா, அரசியல்வாதிகளுக்கு எதிராக ஒன்றும் செய்ய முடியாது என்பதால் நாங்கள்



இவற்றை ஏற்று சமாதானமாக வாழ வேண்டும் என நம்புகிறார். இருந்தாலும் அவர்படும் கஷ்டங்களை எதிர்ப்பது போல மாவீரன் கதையைத் தொடர்ந்து எழுதுகிறார்.

ஒருநாள் சத்யாவின் குடும்பம் பெரிய பிரச்சினையை அனுபவிக்கும்போது சத்யா எடுக்கும் முடிவால் அவரது வாழ்க்கை முழுதாக மாறுகிறது. தான் எழுதிய மாவீரனின் கதை போல அவரது வாழ்க்கை மாறுகிறது. மாவீரனைப் போல சத்யா தனது குடும்பத்தையும், அயலவர் களையும் காப்பாற்றுவாரா? இம் முயற்சியில் அவர் இறப்பாரா? என்ற கேள்விகளுக்குப் பதில்களை இப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.

ஜூன் 2023இல் வெளிவந்த "வீரனை"த் தொடர்ந்து ஜூலை 2023இல் வெளியான "மாவீரன்" படமும் Superhero கதை அமைப்பைக் கொண்டது. ஆனால், "மாவீ ரனில்" கதாநாயகனுக்கு சக்தி ஒன்று கிடைத்தாலும் பிற Superhero படங்களைப் போல மாறுவேடம், அதிசயக் காட்சிகள் ஒன்றும் இப்படத்தில் இல்லை.

கதை எழுதிய கலைஞன் தனது கதையில் வாழ்வது போல இருக்கும் இப்படத்தின் அமைப்பு புதிதாகவும், நன்றாகவும் இருந்தது. அமைதியை விரும்பும் கதா நாயகன் புதிய சக்தியைப் பெற்றாலும் தொடர்ந்தும் சண்டையை தவிர்த்தது தத்ரூபமாக இருந்தது. ஆனால், இக்காட்சிகள் அதிகமாக இருப்பதால் படம் நீண்டு கொண்டே போகிறது. இக்காட்சிகள் ஒரு சிலவற்றுடன் பார்வையாளர்களுக்குக் கதாநாயகனை விளக்கியிருக்கலாம்.

தைரியமாக சத்யாவின் தாயும் (சரிதா) மற்றும் கதாநாயகியான பத்திரிகை உதவிப் பதிப்பாசிரியரான நிலாவும் (அதிதி சங்கர்) நல்ல கதாபாத்திரங்களாக இருந்தன. ஆனால், இப்படத்தில் கதா நாயகனுக்கும் வில்லனான மந்திரிக்கும் (மிஷ்கின்) மட்டுமே அதிக, முக்கிய காட்சிகள் இருந்தன. பிறருக்கு போதி யளவு காட்சிகளோ, வேலையோ இல்லை.



எமக்குப் பழக்கமான "அரசியல்வாதிகளை எதிர்க்கும் கதாநாயகனின்" கதையை Superhero Comics மூலம் காட்டி இயக்குநர் புதுப்பித்துள்ளார். நன்றாக அமைந்த இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.

# வாழ்க்கை

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:

**www.timelesstoday.com**

**www.premrawat.com**

மக்கள் அமைதி தேவை அமைதி தேவை என கூறுகின்றனர். எப்பொழுது அவர்கள் அவ்வாறு கூறுகின்றனர்? நிம்மதி இல்லாத நிலையிலே அவர்கள் வேதனை அடையும் பொழுது அவ்வாறு கூறுகின்றனர் அதற்கு முதல் யார் அமைதி பற்றிக் கவலைப்படுகிறார்கள், அமைதி என்றால் என்ன? யாரிட மாவது உங்களுக்கு அமைதி தேவை எனக் கூறினால் நீ ஒரு விசித்திரமான ஆளாக இருக்கிறாயே உனது மூளை சரியாக உள்ளதா எனக் கேட்பர். பாருங்கள் நீங்கள் எவ்வளவு தான் பெரிய புத்திசாலி என உங்களை எண்ணினாலும் சரி, நீங்கள் புத்தி சாலி இல்லை என நான் கூறவில்லை நீங்கள் புத்திசாலிதான். ஆனால் நீங்கள் எவ்வளவு தான் புத்திசாலி என உங்களை எண்ணினா லும் உங்களுக்கு எவ்வளவுதான் விஷயங்கள் தெரிந்திருந்தாலும் அவை எல்லாம் உங்களது மூளையின் உள்ளே போடப்பட்ட விடயங்கள் தான்.

ஒரு சிறிய குழந்தைக்குக் கடவுள் என்றால் என்ன எனத் தெரியாது. சிறிய குழந்தைக்கு நரகம் என்றால் என்ன எனத் தெரியாது, சொர்க்கம் என்றால் என்ன எனத் தெரியாது, சிறிய குழந்தைக்குப் பூசைகள் வழிபாடுகள் செய்வதாலே என்னவெல்லாம் நடக்கும் எனத் தெரியாது, அமைதி என்றால் என்ன என்பது கூடச் சிறிய குழந்தைக்குத் தெரியாது, சிறிய குழந்தைக்குத் தேவ தேவதைகள் என்றால் என்ன எனத் தெரியாது சிறிய குழந்தைக்கு ஒன்றுமே தெரியாது.

ஒவ்வொரு நாளும் செல்லச் செல்ல, கழியக் கழிய, குழந்தை கற்றுக் கொள்கிறது, கற்றுக் கொள்கிறது. நீங்கள் ஒன்றை சொல்லும்பொழுது அல்லது தாய் ஒன்றை சொல்லும்பொழுது, தந்தை அல்லது யாராவது ஒன்றை சொல்லும்பொழுது அந்தக் குழந்தை ஒரு சொல்லைக்கூடப் புரிந்து கொள்ளாது. வெறுமனே அது சத்தத்தைக் கேட்கிறது. பல தடவைகள் அது எந்தக் காரணமும் இல்லாமல் கத்தும் அது தானும் ஏதோ பேசுவதாக எண்ணுகிறது. அது தானும் ஏதோ பேசுவதாக எண்ணிக் கொள்ளும். ஆனால் குழந்தை என்ன சொல்கின்றது என்பது உங்களுக்கு விளங்காது.

மெது மெதுவாக அந்தக் குழந்தை கற்றுக் கொள்கிறது எதனை? அம்மா அப்பா அல்லது தந்தை இவ்வாறு மெது மெதுவாக இவற்றையெல்லாம் அந்த பிள்ளையின் தலையில் உள்ளே புகுத்தப்படும். அதற்கு ஒன்று என்றால் என்னவெனத் தெரியாது. ஒன்று என்றால் அது ஏன் ஒன்று என உங்களுக்கும் தெரியாது. ஏனெனில் நீங்கள் எப்பொழுதாவது அது பற்றிக் கேள்வி கேட்க முயன்றால் அதனைப் புரிய வைப்பதற்கு உங்களுக்கு யாரும் கிடைக்க மாட்டார்கள். 1 என்றால் என்ன 2 என்றால் என்ன எனப் யாரும் புரியவைக்க மாட்டார்கள். இவற்றை நீங்கள் மனப்பாடம் செய்ய வேண்டி இருக்கும் 1234 நாலை ஏன் நாலு எனக் கூற வேண்டும் ஏன் வேறு ஏதாவது சொல்லக்கூடாது?

இல்லை அவற்றைப் படிக்க வேண்டி உள்ளது. உங்களிடம் கேள்வி கேட்கக் கூடிய ஆற்றல்கூட இல்லாத வயதிலேயே இவை கற்பிக்கப்படுகின்றன. ஏ பி சி டி இதுதான் ஏ சி போ என்பர். ஆனால் என்றோ ஒருநாள் நீங்களாவது இருந்து யோசிக்க வேண்டும், எனது மூளையின் உள்ளே போடப்படுகின்ற விடயங்களில் எத்தனை எனது நன்மைக்காகப் போடப்படுகின்றன எத்தனை எனக்கு தீங்கை விளைவிக்கும் என யோசிக்க வேண்டும். எதனை எக்கவுண்டிங் என அழைப்பர். எளிமையான கணக்கு எடுத்தல். எப்பொழுதாவது கணக்கு எடுத் துள்ளீர்களா? உங்களது மூளையிலே என்ன உள்ளதோ அதனை எந்தக் கேள்வியும் கேட்காது நீங்கள் பாவிக்கிறீர்கள்.

குருவினுடைய முக்கியத்துவம் என்னவென் றால் அவர் அவ்வாறான கேள்வியை உங்களது மூளையிலே போடுகிறார். இல்லை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்கிறார். கணக்கெடுத்தல் நடைபெற வேண்டும் உங்களுக்கு நன்மை தருபவை என்ன உங்களுக்கு தீமை தருபவை என்ன என்பது உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும் எதனை செய்வதனால் உங்களுக்கு நன்மை கிடைக்கும் எனத் தெரிந்திருக்க வேண்டும்.

ஏனெனில் ஒரு விடயத்தை நான் கூறுகிறேன் இவ்வாழ்க்கை எனும் போரினிலே, ஏனெனில் வாழ்க்கை இப்பொழுது ஒரு போராட்டமாக மாற்றப் பட்டுவிட்டது. ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒன்று செய்ய வேண்டும். ஏதாவது ஒன்று செய்ய வேண்டும். இது ஒரு போராட்ட மாக மாறிவிட்டது. சண்டையைப் போல சில நாட்களில் தோல்வி, பின்னர் சிறிதளவு வெற்றி பின்னர் தோல்வி வெற்றி-தோல்வி தொந்தரவுகள் என உள்ளது. இந்த வாழ்க்கையிலே இப்போராட்டம் நடைபெறு கின்றது என்றால் எல்லாவற்றிலும் முதலாவதாக எதனை வெற்றி கொள்ள வேண்டும்?

ஏனெனில் உங்களது பிரச்சினைகள் எல்லா வற்றையும் நீங்கள் வெல்ல விரும்புகின்றீர் கள். ஒருபுறம் நீங்கள், மறுபுறம் உங்களது பிரச்சினைகள் உள்ளன. அவற்றில் முதலாவ தாக யார் வெற்றி அடைய வேண்டும்? யாரை வெல்ல வேண்டும்? ஏனெனில் நீங்கள் உங்களை வெல்லவில்லை என்றால் நீங்கள் எதனையுமே வெல்ல மாட்டீர்கள். வெற்றி கொண்டு விட்டீர்கள் போல தோன்றினாலும் வெற்றி அடைய முடியாமல் இருப்பீர்கள்.

ஏனெனில் அது உங்களது அல்ல. நீங்கள் உங்களிடம் தோற்று விட்டீர்கள். எனவே இந்த வாழ்க்கையில் முதலாவதாக நீங்கள் வெற்றி கொள்ள வேண்டியது உங்களைத் தான். உங்களையே நீங்கள் வெற்றி கொள்ள வேண்டும். உங்களை நீங்கள் வெல்ல வில்லை என்றால் நீங்கள் எதையுமே வெல்ல மாட்டீர்கள். பிரச்சினைகள் வந்து கொண்டே இருக்கும். நீங்கள் அவற்றுடன் போராட்டம் செய்து கொண்டு இருப்பீர்கள். உங்களது பிரச்சினைகளுடன் போராடிப் போராடி ஒரு நாள் உங்களது உயிர் போய்விடும். இந்த உடல் உங்களது. உங்களது உடல்கூட உங்களுடையதாக இருக்காது. அதாவது உங்களுடையது எனக் கூறுவதற்கு உங்களிடம் ஒன்றுமே இருக்காது.

*Brand New Condo Project*

# THE GRAND

## AT UNIVERSAL CITY

*Starting Low $ 600K*



1 Bed Room to 3 Bed Room

- ⌘ Flexible deposit structure
- ⌘ #5000 Upon Signing
- ⌘ 2.5% Extended Deposit
- ⌘ Occupancy : November 2027
- ⌘ 1 Year Free maintenance fee.
- ⌘ 5 Appliances included
- ⌘ No Assignment Fee
- ⌘ Rental Possible during Occupancy
- ⌘ Development Charges capped.

**Please Call : Raja Mahendran 416-315-9397**

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.